நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

ISSN 1391-9504

Vijey විජය

# விஜய்

Price Rs. 20.00
விலை ரூ: 20.00

24.12.2008 - மலர் 05, இதழ் 42



## இயேசு பாலன் பிறந்தாரே
## உலகின் ஒளியாய் வந்தாரே
## மாந்தர் யாவரும் இனிதே வாழ
## தன்னை உலகிற்கு தந்தாரே

## இனிய
## நத்தார் வாழ்த்துக்கள்

## வான் அஞ்சல் சேவையின் அறிமுகம்



## மண் சரிவை தடுக்கும் வழிமுறைகள்



விலை
ரூபா 12/-

**தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியில் ஏற்படும் காலநிலை மாற்றங்கள்



**இலங்கை வாழ் மக்களுக்கு கடும் குளிர் அல்லது கடும் வெப்பம் ஏற்படுவதென்பது அபூர்வமானதே. அந்தளவிற்கு நல்லதோர் இயற்கை காலநிலையை இலங்கை கொண்டுள்ளது. ஆனால், உலகிலுள்ள ஏனைய நாடுகளோ மாறுபட்ட காலநிலையை கொண்டுள்ளன.**

**உலகில் காலநிலை மாற்றங்கள் என்பது சர்வசாதாரணமாக நடப்பது தான் ஆனால், இந்தக் காலநிலை மாற்றமானது அளவிற்கு அதிகமாக நிகழ்வது ஆபத்தையே ஏற்படுத்தவல்லது. அத்தகைய காலநிலை மாற்றங்களைக் கண்டு வருகின்ற உலகின் சில பகுதிகளைப் பற்றி இங்கு ஆராய்வோம்.**

## கடும் குளிரான இடம்

உலகிலேயே அண்டார்டிக்காப் பகுதியே அதிகூடிய குளிரைக் கொண்ட பகுதிகளாகக் கருதப்படுகின்றது. இங்கு வெப்பநிலையானது 40 சென்டிகிரேட் தொடக்கம் 50 இற்கும் இடையில் காணப்படுகின்றது. இதுவரை பதிவாகியுள்ள விபரங்களின்படி இங்கு ஆகக்கூடிய வெப்பநிலை பதிவாகியுள்ள காலப்பருவம் 1983 ஆம் ஆண்டில் ஆகும். இது 89.6 சென்டிகிரேட் ஆக இருந்தது.



இப்பகுதியில்தான் அதிகூடிய வேகத்திலான காற்றும் வீசுகின்றது.

அதாவது, மணிக்கு 320 கி.மீற்றர் வேகத்தில் இங்கு காற்று வீசுகின்றது. இவ்வாறு வேகமான காற்று வீசும் பகுதிகளில் மக்கள் வசிப்பதும் இல்லை. குறிப்பாக அன்டார்டிக்காவில் மக்கள் வசிக்கின்ற பகுதியாகக் கருதப்படுவது குறைந்தளவிலாவது வெப்பத்தைக் கொண்டுள்ள சைபீரியாப் பகுதியே ஆகும்.

## 100 வருடங்களுக்கு ஒரு தடவை மழை பெய்தால்

மழையானது இன்றியமையாத ஒன்றாகும். இந்தியாவில் வருடமொன்றிற்கு 12,000 மி.மீற்றர் அளவில் மழைவீழ்ச்சி 'ஷைலோங்க்' என்ற வலயப்பகுதியில் காணப்படுகின்றது. ஜூன், செப்டெம்பர் ஆகிய காலப்பகுதிகளுக்குள் கூடியளவு மழைவீழ்ச்சியை இங்கு காணலாம். கொலம்பியாவின் 'பியுலுன் அவென்ச்சர்' என்ற பிரதேசத்திற்கும் வருடமொன்றிற்கு 7000 மி.மீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுகின்றது. இக்காலப்பருவத்தில் இப்பிரதேசத்திலுள்ள வீடுகள் மற்றும் விவசாயக் காணிகள் வெள்ளத்தினால் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன.

உலகில் மிகவும் வறட்சியான பிரதேசமாக 'சிலி' நாட்டின் 'எட்காமா' என்ற பாலைவனப் பகுதியே கருதப்படுகின்றது. இந்த பாலைவனத்திற்கு மழைத்துளியொன்று வீழ்வது நூறு வருடத்திற்கு ஒரு தடவைதானாம்.

## வானத்திலிருந்து விழும் பனிக்கட்டிகள்

உலகில் அதிக பனிமழை கிடைக்கப்பெற்ற வருடங்களாக 1971 ஆம் ஆண்டு தொடக்கம் 1972ஆம் ஆண்டு வரையிலான காலப்பருவம் கருதப்படுகின்றது. அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில்'மவுண்ட்ரேனியர்' என்ற நகரிலேயே இவ்வாறு அதிகூடிய பனிமழைவீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இங்கு பெய்த கடும் பனிமழையினால் 30 மீற்றருக்கும் அதிகமான உயரத்திற்கு பனியினால் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வெப்பம்மிகு பகுதி

பூமியில் மிகக் கூடிய வெப்பத்தைக் கொண்ட பகுதியாக கருதப்படுவது கெலிபோர்னியாவின் 'மரணப் பள்ளத்தாக்கு' (Death Valley) என்ற பகுதியாகும்.

வருடத்தில் சுமார் இரண்டு மாதங்கள் அளவில் 50 பாகை சென்டிகிரேட்டுக்கு அதிகமான வெப்பநிலை இங்கு காணப்படும். புவியில் இதுவரை பதிவாகியுள்ள அதிகூடிய வெப்பநிலை 57.7 பாகை சென்டிகிரேட்டாகும். லிபியாவின் அல் அஸீஸியா பிரதேசத்தில் இது பதிவாகியுள்ளது.

## நூல் அறிமுகம்

***சின்னஞ்சிறியோருக்கான 'வட்டம் போட்ட 8கள்', 'நிக்கிமிக்'என்னும் நூல்கள் வெளிவந்துள்ளன.***

***டி.ஆர்.பி.லதா இதனை எழுதியுள்ளார். இந்நூல்களுக்கான ஓவியங்களை ஓவியக்கலைஞர் வி. சுப்பிரமணியம் வரைந்துள்ளார். சிறுவர்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய வகையில் கொழும்பு-13 தேவி பிரின்டர்ஸ் அச்சிட்டுள்ள இந்நூல்கள் ஒவ்வொன்றினதும் விலை ரூபா 150/=***



***இந்நூல்களை முன்னணி தமிழ்ப் புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.***



**கொ/இந்துக் கல்லூரியில் 2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை (85), அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் சகிதம் காணலாம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## 2009 தரம்-1 இற்கு

# மாணவர்கள் அனுமதி ஜனவரி 12 ஆம் திகதி ஆரம்பம்

எதிர்வரும் ஆண்டில் பாடசாலைகளில் தரம்-1 இற்கு மாணவர்களை அனுமதிக்கும் நடவடிக்கை ஜனவரி மாதம் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முதலாம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ள புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் உள்ள ஆரம்பப் பிரிவுகளில் இடம்பெறவுள்ளதாகவும் இந்த வரவேற்பு நிகழ்வுகள் புதிதாக பாடசாலைக்கு வருகை தரவுள்ள மாணவர்களைக் கவரும் விதத்தில் ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். அத்துடன், அன்றைய தினத்தில் ஆரம்பக் கல்வி மறுசீரமைப்புத் தொடர்பாக பெற்றோர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டின் முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக நாடு பூராகவுமுள்ள சகல அரசாங்கப் பாடசாலைகளையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி திறக்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கான மதிப்பீடு



அடுத்த வருடத்திலிருந்து மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான விசேட திட்டமொன்றை கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் இந்த மதிப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளபோதும் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இதன் முதற்கட்ட மதிப்பீட்டுப் பணிகள் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் முன்னெடுக்கவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்துவது இத்திட்டத்தின் பொதுவான நோக்கமாயினும் கூட குறிப்பாக, பாடசாலைத் தவணைப் பரீட்சைகளின்போது பாடத்திட்டத்திற்கேற்ப மாணவர்களின் கல்வி முன்னேற்றங்கள் எந்தளவில் உள்ளன என்பதை மதிப்பீடு செய்வது இந்த மதிப்பீட்டுத் திட்டத்தின் பிரதான நோக்கம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதன்படி, புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தரம் 6,7,8 உட்பட தரம் 11 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கப்படும் ஆறு பாடங்கள் மதிப்பீட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், பரீட்சைத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் கல்வி அமைச்சு என்பனவற்றின் நெறிப்படுத்தலின்கீழ் இந்த வகுப்புகளுக்கான பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆமையை ஒத்த விலங்கின் எச்சம் கண்டுபிடிப்பு

சீனாவின் குய்சூ மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது 220 மில்லியன் ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆமையை ஒத்த விலங்கின் உடல் எச்சங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.



இந்த விலங்கின் முதுகில் ஓட்டுப் பகுதி இருந்துள்ளதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இந்த விலங்குக்கு 'ஒடொன்டோச்சிலிஸ் செமிடெஸ்டாக்கே' என்று பெயர் சூட்டியுள்ளனர். 'தனி ஓடுடைய விலங்கு' என்பதே அதன் பொருளாகும். இந்த ஓடு தசையினால் உருவாக்கப்பட்டதல்ல என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் 'டைனோசர்' வாழ்ந்த காலப்பகுதியில் இந்த விலங்கு முழு வளர்ச்சியடைந்த நிலையில் வாழ்ந்திருக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். 'ஒடொன்டோச்சிலிஸ் செமிடெஸ்டாக்கே' தொடர்பான ஆய்வுகளை சீனா மற்றும் கனேடிய இயற்கை விஞ்ஞானப் பிரிவினைச் சேர்ந்த ஆய்வுக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## மழைநீர் சேகரிப்பு தொடர்பான விழிப்புணர்வு




மழைநீரை சேகரித்து, சுத்திகரித்து அதனை குடிநீராகவும் வேறும் பல தேவைகளுக்காகவும் பயன்படுத்துவது தொடர்பாக மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்றை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக அரச திணைக்களங்களின் தலைவர்களுக்கான விழிப்புணர்வுத் திட்ட செயலமர்வுகள் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## விஜய் வழங்கும் அறிவுசார் போட்டி!

உங்கள் திறமைக்கு ஒரு சவால்...

**போட்டி விபரங்கள்**

டிசம்பர் மாதம் முழுவதும் வெளிவருகின்ற 'விஜய்' இதழ்களில் பலதரப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்ட பொது அறிவுக் கேள்விகள் ஒவ்வொரு இதழிலும் தலா ஐந்து கேள்விகள் வீதம் வழங்கப்படும். கேள்விகளுக்கு அருகே வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையின் கீழ் கோடிட வேண்டும். இதன்படி ஐந்து வாரங்களைக் கொண்ட டிசம்பர் மாதத்தில் மொத்தமாக 25 கேள்விகள் கேட்கப்பட்டிருக்கும். இந்த கேள்விகளில் கூடிய அளவில் சரியான விடைகளை அடையாளப்படுத்தியோர் வரிசைப்படுத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

ஐந்து வாரங்களும் பகுதி பகுதியாக கேள்விகள் வழங்கப்படுகின்றமையால் ஐந்து பகுதிக் கேள்விகளையும் பகுதி - 1, 2, 3, 4, 5 என சேகரித்து அவற்றிற்கான விடைகளை எழுதி அவற்றை ஒட்டு மொத்தமாக எமக்கு தபாலில் அனுப்பவும். தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**பரிசுகள் ஏராளம்**




- கல்குலேட்டர்கள் → 05
- விலையுயர்ந்த பேனாக்கள் → 15
- கீடெக்குகள் (Key Tag) → 15





**இன்னும் பல ஆறுதல் பரிசும் உண்டு**

**இந்த வாரத்திற்கான கேள்விகள் பகுதி - 04**

16. சீனாவில் உற்பத்தி செய்யப்படும் பால்மாக்களில் எந்த இரசாயனம் கலக்கப்பட்டிருப்பதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது?
 *(அசோட்டிக், மெலமைன், சல்ஃபூரிக் அமிலம்)*
17. ஹெரி பொட்டர் நாவலை எழுதியவர்?
 *(ஜே.கே.ரோவ்லிங், கெதரினா ஃப்ளெமிங், ஐ.கே.இர்வின்)*
18. இலங்கைக்கு முதன்முதலில் ஒலிம்பிக் பதக்கத்தை ஈட்டித் தந்தவர் யார்?
 *(டங்கன்வைட், சுசந்திகா ஜயசிங்ஹ, கருணாரத்ன)*
19. இலங்கையில் தேசிய வாசிப்பு மாதமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாதம்?
 *(ஜனவரி, ஒக்டோபர், ஜூன்)*
20. உலகில் பெண்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கும் நாடு எது?
 *(இஸ்ரேல், அமெரிக்கா, ஜப்பான்)*

மிகுதி கேள்விகளை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

**டிசம்பர் மாத இதழ்களை இன்றே பதிவு செய்யுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை ஆண்ட அரசிகள்



இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையில் இராசதானிகளையும் அவற்றில் ஆட்சி புரிந்தவர்களையும் ஆராய்ந்தால் அதில் மிகப் பெரும்பான்மையோராக அரசர்களே இருப்பர். அந்த அரசர்கள் பற்றிய பல முக்கிய தகவல்களும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. அதேவேளை, அரசிகள் ஆண்டதற்கான சான்றுகளும் அவர்களைப் பற்றிய தகவல்களும் மிகக் குறைவான அளவே கிடைத்துள்ளன. அந்த வகையில் மிகச் சிலரே இலங்கையை ஆண்ட அரசிகள் வரிசையில் வருகின்றனர். மொத்தம் ஐந்து அரசிகளே இலங்கையை ஆண்டதாக வரலாற்று நூல்களும் வரலாற்றுச் சான்றுகளும் தெரிவிக்கின்றன. அந்த அரசிகள் பற்றிய பல சுவையான தகவல்களை இங்கு பார்ப்போம்.

## அரசி-கல்யாணவதி (கி.பி.1202-1208)

எமது வரலாற்றுச் சான்று நூல்களில் ஒன்றாகிய சூளவம்சத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி கல்யாணவதி பொலன்னறுவையை தலைநகராகக் கொண்டு சிறப்பாக ஆட்சி செய்தவர்களில் ஒருவராகிய நிஸங்கமல்லனின் மகாராணியாவார். மன்னன் நிஸங்கமல்லனின் மகாராணியாகத் திகழ்ந்தவர் கலிங்க சுபத்ரா என்றும் அவனின் இரண்டாம் மகாராணியே கல்யாணவதி தேவி என்றும் சில கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதன்படி, கலிங்க சுபத்ராதேவியின் பின் கல்யாணவதி தேவியை நிஸங்கமல்லன் மகாராணியாகத் தெரிவு செய்திருப்பான் என கருத இடமுண்டு. சாகஸமல்லன் எனும் மன்னனின் பின்பே கல்யாணவதி தேவி ஆட்சியைக் கைப்பற்றினாள். ஆயஸ்மந்தன் எனும் பெயருடைய சேனாதிபதி கல்யாணவதிதேவி ஆட்சியைக் கைப்பற்றப் பெரிதும் உதவினான். மகாவம்சத்தில் குறிப்பிட்டவாறு கல்யாணவதி தேவியின் ஆட்சிக்காலம் ஆறு வருடங்களாகும்.

எனினும், கல்யாணவதியின் ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களின்படி அவள் எட்டு வருடங்களுக்கும் மேலாக ஆட்சி புரிந்ததாக தெரிய வருகின்றது. கல்யாணவதி அரசியான பின் ஆறு வருடங்கள் கழிந்த வேளையில் அவள் அரசியாவதற்குரிய அரசுரிமையைப் பெற்றுக் கொடுத்த ஆயஸ்மந்த எனும் சேனாதிபதியே அவளை சிங்காசனத்தில் இருந்து இறங்கச் செய்தான். அதன்பின் அரசுரிமையுள்ள தர்மாஷோக எனும் மூன்று மாதக் குழந்தையை அரசனாக்கி விட்டு ஆயஸ்மந்தன் தான் விரும்பியபடி ஆட்சி நடத்தினான். அரசாட்சி நீங்கினாலும் அதன்பின் வெளியிடப்பட்ட அரச கட்டளைகளும் அரச அறிக்கைகளும் கல்யாணவதி அரசியின் பெயரிலேயே முன்வைக்கப்பட்டன. அவள் சிங்காசனத்தை இழந்தாலும் அரச அதிகாரம் அவளின் கைவிட்டுப் போகவில்லை என்பது உறுதியாகின்றது.கல்யாணவதி அரசி பண்ணசாலக்க எனும் ஊரில் தனது பெயரில் விகாரை ஒன்றைக் கட்டுவித்து அதற்குப் பூசை செய்து வந்ததாக 'மகாவம்சம்' குறிப்பிடுகின்றது.

அநுராதபுரத்தின் சலபத்தலமளுவில் தென்திசை வாயிலின் அருகில் மரச்செதுக்கலிலும் மகியங்கனை 'மினிப்பே' கால்வாயிலுள்ள கல்வெட்டிலும் 'பத்தலகொட' குளக்கட்டில் உள்ள கல்வெட்டுக்களிலும் கல்யாணவதியின் ஆட்சிக்காலத்தைக் குறிப்பிடும் சான்றுகள் காணப்படுகின்றன. அத்துடன், அவளது ஆட்சிக் காலத்தில் அவளின் பெயரால் செம்புக்காசுகளும் வெளியிடப்பட்டுள்ளன.

## அரசி அநுலா கி.மு.48-43



அநுலாதேவியே இலங்கை வரலாற்றில் அரசியாக அபிஷேகம் செய்யப்பட்ட முதலாவது அரசியாகும். அவள் சோரநாக மன்னனின் மகாராணி ஆவாள். சோரநாக மன்னனுக்கு நஞ்சூட்டி அவனைக்கொன்று அநுராதபுர இராசதானியின் சிங்காசனத்தைக் கைப்பற்றினாள். இக்கால கட்டத்தில் சோரநாக மன்னனுக்கு முன் ஆட்சி செய்த மகாசூள மகாதீச மன்னனின் இரண்டாவது மகனாகிய குட்டகண்ணதீசன் எனும் இளவரசனுக்கு முழு அரசுரிமை இருந்தும் அவன் அநுலா அரசியிடமிருந்து தனதுயிரைக் காப்பாற்ற மறைவாக வாழ்க்கை நடத்தினான்.

வம்சக்கதைகளில் குறிப்பிட்டுள்ளதன்படி அரசி அநுலா ஒழுக்கமான வாழ்க்கை நடத்தியதாகத் தெரியவில்லை. சோரநாக மன்னனின் மரணத்தின் பின் அவள் தீசன் எனும் பெயருள்ள ஒருவனுக்கு ஆட்சி செய்யும் பொருட்டு அரசுரிமையைக் கையளித்தாள். அதன்பின் சிவன் எனும் பிரதான வாயில்காப்போனுக்கும் தரகெட்டிதீச என்பவனுக்கும் நீலியன் எனும் தமிழர் ஒருவனுக்கும் இவர்கள் உள்ளிட்ட மொத்தம் 32 பேருக்கு நாட்டை ஆட்சி செய்யும் அதிகாரத்தை வழங்கி அவர்களுக்கு மகாராணியாக வாழ்ந்ததாக வம்சக்கதைகள் தெரிவிக்கின்றன. இறுதியில் நான்கு மாதங்களாகத் தானே அரசியாக ஆட்சி செய்து வருகையில் குட்டகண்ணதீசன் தனது மறைவிடத்தை விட்டு வெளியேறி வந்து அரசி அநுலாவைக் கொலை செய்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினான்.

## டோனா கத்தரீனா



எமது நாட்டின் வரலாற்றில் இறுதி அரசியாக குறிப்பிடக்கூடியவள் டோனா கத்தரினா ஆவாள். இவள் கண்டி இராச்சியத்தில் இருந்த கரலியத்தே பண்டார மன்னனின் மகளாவாள். போர்த்துக்கேயரால் வளர்க்கப்பட்டதன் பலனாக குசுமாசனதேவி எனும் இயற்பெயர் கொண்ட அவள் டோனா கத்தரினா எனும் பெயரில் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினாள்.

தனது தந்தையின் மரணத்தின் பின் போர்த்துக்கேயரின் உதவியுடன் மலையக இராச்சியத்தின் அரசியானாள். எனினும், மிகக் குறுகிய காலத்தில் சீதாவாக்கை இராச்சியத்தின் மன்னனாகிய முதலாம் இராஜசிங்கன் டோனா கத்தரினா தேவியிடமிருந்து ஆட்சியுரிமையைக் கைப்பற்றினான்.

## சீவலி அரசி (கி.பி.32-33)



சூளாபய மன்னனின் பின் அநுராதபுர இராசதானியின் அரசியாக நியமிக்கப்பட்ட சீவலி ஆமண்ட காமினியின் மகளாவாள். கன்னிராஜானோ மன்னனின் சகோதரியாவாள். தீபவம்சத்தில் சீவலி அரசியின் பெயர் 'ரேவதி' என குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு மாதங்களே இவளின் ஆட்சி அதிகாரம் நீடித்தது. அதன்பின் இளநாகன் எனும் மன்னன் சீவலி அரசியை நீக்கிவிட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினான்.

## அரசி லீலாவதி

பொலன்னறுவை இராசதானியில் மிகவும் கீர்த்தி பெற்ற மன்னராகிய மகா பராக்கிரமபாகுவின் மகாராணியே இந்த லீலாவதி அரசி என வரலாற்றுச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. அவள் பொலன்னறுவை இராசதானியில் மும்முறை அரசியாக ஆட்சிபுரிந்துள்ளதாக தெரியவருகின்றது. கல்வெட்டுக்கள் மற்றும் வம்சக்கதைகளின்படி அரசி லீலாவதி சூரியவம்சத்தை அல்லது சந்திரவம்சத்தை சேர்ந்தவள் என குறிப்பிடப்பட்டுள்ளது. மகா வம்சத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி அவள் பாண்டிய அரச வம்சத்தில் தோன்றியவள் என குறிப்பிடப்படுகின்றது. சிரிவல்லபன் எனும் பாண்டிய இளவரசனே அவளது தந்தை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகா பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தின்பின் கலிங்க வம்சத்தினருக்கும் பாண்டிய வம்சத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கடிகளால் நாட்டின் அரசியலில் ஒரு ஸ்திரமற்ற நிலை தோன்றியது. இதனை பயன்படுத்தி நாட்டில் சேனாதிபதிகளின் கை ஓங்கியது. இதன்படி கி.பி.1197 இல் கீர்த்தி எனும் சேனாதிபதியின் உதவியுடன் லீலாவதி அரசியானாள். அரசியான பின் ஏறக்குறைய மூன்று வருடங்கள் அமைதியாக நாட்டை ஆண்டாள். கி.பி.1200 இல் சாகசமல்லன் எனும் கலிங்க வம்ச இளவரசன் லீலாவதியை நீக்கி அரச அதிகாரத்தைக் கைப்பற்றினான். ஆனால், கி.பி.1210 இல் தமிழர் படையுடன் வந்த லோகேஸ்வரன் எனும் கலிங்கவம்ச இளவரசன் மீண்டும் ஒருமுறை லீலாவதி அரசியிடமிருந்து அரசுரிமையை பறித்தெடுத்து தான் ஆட்சி புரிந்தான். கி.பி.1211 இல் மீண்டும் மூன்றாம் முறையாக லீலாவதி அரசி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினாள். பராக்கிரம எனும் சேனாதிபதியின் உதவியுடனேயே அவளால் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது. இவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றி ஏழு மாதங்கள் கடந்தவுடன் இந்தியாவில் இருந்து படையெடுத்து வந்த பராக்கிரமன் எனும் பாண்டிய இளவரசன் இலங்கையைக் கைப்பற்றி லீலாவதி அரசியை துரத்தி தானே அரசனானான்.




லீலாவதி அரசியால் குழந்தைகளுக்கு தானம் வழங்குவதற்காக 'பலபலவிமேதாவி' எனும் தானசாலை நிறுவப்பட்டது. அத்துடன், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வர்த்தக குழுவினரிடம் வரி அறவிட்டு அதில் கிடைத்த வருமானத்தை தானசாலைகளுக்குத் தேவையான சமையல் பொருட்களை வாங்க வழங்கியதாக 'புளியங்குளம்' எனும் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. பொலன்னறுவை யுகத்தில் எழுதப்பட்டதாக உறுதிப்படுத்தப்படும் ஒரே ஒரு செய்யுள் இலக்கியம் அல்லது இசைக்காவியமாகிய 'சஸந்தாகவ' எனும் இலக்கியப் படைப்பு லீலாவதியின் ஆட்சியின் போதே எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதேபோல், தாந்தாவம்சமும் அக்காலத்திலேயே எழுதப்பட்டது. லீலாவதி அரசி தனது பெயரில் செப்புக்காசும் வெளியிட்டாள். புளியங்குளம் கல்வெட்டு, அபயவாவி கல்வெட்டு, நுவரெலியா ரெக்கட்டிபே பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் அனைத்தும் லீலாவதி அரசியின் காலத்தில் எழுதப்பட்டவையே. இவை அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாதிருந்தும் லீலாவதியின் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஞாயிற்றுத் தொகுதி (சூரியக் குடும்பம்)

ஞாயிற்றுத் தொகுதி எவ்வாறு தோன்றியது? என்ற கேள்விக்கு உறுதியான கொள்கையோ சரியான விடையோ இதுவரை கண்டறியப்படவில்லை. எனினும், ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம் குறித்து பல் வேறு கருத்துக்கள் இதுவரை கூறப் பட்டு வந்துள்ளன. அதன்படி, 18 ஆம் நூற்றாண்டில் புகையுருக் கோட்பாடு வெளியிடப்பட்டது. பல வாயுக்களால் அமைந்த பெரும் தொகுதி ஒன்று, சுழற்சியினால் மெதுவாகக் குளிர்ந்து சுருங்கத் தொடங்கியது. அச்சுருக்கத் தின் காரணமாக, அந்தத் தொகுதி முழுவதும் ஈர்ப்புச் சக்தியின் காரணத்தினால் சுழற்சி வேகம்




மேலும் அதிகரித்தது. அதனால், அத்தொகுதியின் வெளிப்பரப்பின் வேகம் மிகவும் அதிகமாக, ஈர்ப்பை மீறத் தொடங்கியது. இதிலிருந்து சிறு சிறு துண்டுகள் விடுபட்டுக் கோள்கள் உருவாகின. நடுப்பகுதி மட்டும் சூரியனாக ஒளியையும் வெப்பத்தையும் அளித்தது என்று அக்கோட்பாட்டில் கூறப்பட்டிருந்தது. பிற்காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக தொலைநோக்கி கண்டுபிடிக்கப்பட்டதோடு, ஈர்ப்பு விசையை மீறி இடைப்பட்ட துண்டுகள் வெளியேற முடியாது என்று கண்டறியப்பட்டது. இதனையடுத்து புகையுருக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப் படவில்லை.


## 18ஆம் நூற்றாண்டில் உருவான மற்றொரு கோட்பாடு

18 ஆம் நூற்றாண்டில் ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம் பற்றிய மற்றொரு கொள்கை உருவானது. விண்வெளியில் திரியும் ஒரு விண்வெள்ளி சூரியனின் அருகே வர நேர்ந்த பொழுது ஈர்ப்பின் காரணமாக, சூரியனது வாயுக்களை விண்வெளியில் அது கவர்ந்து ஈர்த்தது. அவ்வாறு சூரியனிலிருந்து பிரிந்த வாயுக்கள் குளிர்ந்து கோள்களாக உருவாகின என்று அக்கொள்கை கூறியது. எனினும், இரு விண்வெள்ளிகளுக்கும் இடையில் உள்ள தூரம் மிக அதிகமாக இருந்தமையால் சூரியனை நோக்கி அதன் அருகே மற்றொரு விண்மீன் வந்திருக்கும் என்பதற்கு சாத்தியமில்லை என்று கூறப்பட்டதை அடுத்து அக்கொள்கையும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

## தற்போதைய கொள்கை

இறுதியாகத் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப் பட்ட கொள்கை ஒன்று உள்ளது. அதன்படி, வெகுகாலத்திற்கு முன் மிகப்பெரிய விண்முகில் ஒன்று இருந்தது. அதன் ஒரு பகுதியில் நிறைச்செறிவு ஏற்பட்டது. இப்பகுதி ஏனைய பகுதிகளை ஈர்க்க ஆரம்பித்தது. சேர்.ஐசக் நியூட்டனின் ஈர்ப்பு விதியின்படி, இரு பகுதிகளான விண்முகிலின் நிறை ஈர்ப்புச் செறிவு மிகுந்த பகுதி, மறுபகுதியை ஈர்க்க ஆரம்பித்தது. இதன்பின் சொந்த நிறை ஈர்ப்பினால் விண்முகில் சுருங்கத் தொடங்கியது.இந்நிலையில் இது ஒரு வாயுப் பந்து போல் சுருங்கச் சுருங்கச் சுழலும் வேகமும் அதிகரித்தது.

காலப்போக்கில் இதன் மையப்பகுதி குமிழ் போன்றும் சுற்றுப்பகுதி வட்டுப் போன்ற அமைப்பையும் பெற்றது. அத்துடன், வெளிப்புற வட்டின் சுழற்சி வேகம் அதிகரித்ததால் மையப் பகுதியில் உள்ள குமிழ் மேலும் சுருங்கியது. இதனால், மையத்தில் வெப்பம் அதிகரித்து மையப்பகுதி ஒரு விண்மீனாக (சூரியனாக) மாறியது. சுற்றியுள்ள வட்டு உடைந்து சிறு பகுதிகளாகப் பிரிந்து வெவ்வேறு கோள்களாக மாறின.



அதன்படி, சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள்களான புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய் ஆகியன மிக அதிகமான வெப்ப நிலையில் இருந்து குளிர்ந்து உருவானவை. இதனால், இவை திடக் கோள்களாகக் காணப்படுகின்றன. இவற்றில் சிலிக்கன், இரும்பு போன்ற தாதுப்பொருட்கள் காணப்படுகின்றன. இத்திடக் கோள்களைச் சுற்றி மென்மையான வளிமண்டலம் காணப்படுகின்றது. ஆனால், சூரியனில் இருந்து தொலைவில் உள்ள கோள்கள் உயர் வெப்பநிலையை அடையாது குளிர்ந்த நிலையில் சுழன்று வருகின்றன. இவை பெரும்பாலும் ஹீலியம், ஐதரசன் ஆகிய வாயுக்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

## ஞாயிற்றுத் தொகுதியில் கோள்கள்

சூரியக் குடும்பத்தில் 8 கோள்கள் உள்ளன. அவை முறையே புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் என்பனவாகும். சூரியனுக்கு அருகிலுள்ள புதன், வெள்ளி, புவி, செவ்வாய் ஆகிய கோள்கள் 'உட்கோள்கள்' (Inner Planets) என்று அழைக்கப் படுகின்றன. ஏனைய கோள்களான வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியன 'வெளிக் கோள்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன. இவ்வனைத்துக் கோள்களும் நீள்வட்டப் பாதையிலேயே சூரியனைச் சுற்றி வருகின்றன.

## சூரியன்


சூரியன் வாயுப் பொருட்களால் ஆன ஒரு தீக்கோளமாகும். சூரியனின் விட்டம் 14,00,000 கிலோ மீற்றர்களாகும். அதாவது, புவியின் விட்டத்தைப் போல் 109 மடங்கு அதிகமாகும். சூரியனின் ஈர்ப்புச் சக்தி புவியின் ஈர்ப்புச் சக்தியைப் போல் 28 மடங்கு அதிகமாகும். விண்வெளியின் மையத்தில் இருந்து சுமார் 32,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் சூரியன் உள்ளது (ஒரு ஒளி ஆண்டு 5,880,000,000 மைல்கள்) என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அண்டத்தின் மையத்தைப் பற்றிக் கொண்டு விநாடிக்கு 250 கிலோ மீற்றர் வேகத்தில் ஒருமுறை சுற்றி வரச் சூரியனுக்கு சுமார் 225 மில்லியன் ஆண்டுகள் ஆகின்றது. இத்துடன், சூரியன் தனது அச்சைப் பற்றிக்கொண்டு ஒருமுறை சுழலத் துருவத்தில் 24 முதல் 25 நாட்களும் மையத்தில் 34 முதல் 37 நாட்களும் எடுக்கின்றன.

சூரியன் புவியில் இருந்து ஏறக்குறைய 150 மில்லியன் கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. அளவில் சூரியன் புவியை விட 1,300,000 மடங்கு பெரியது. சூரியன் வாயுவினாலான நெருப்புக் கோளமாக இருப்பதோடு, இது நான்கு அடுக்குகளைக் கொண்டுள்ளது. சூரியனின் ஒளிமயமான மையப்பகுதி ஒளிக் கோசம் Photo sphere எனப்படும். இதன் வெப்ப நிலையானது 14 மில்லியன் பாகை சென்றிகிரேட் ஆகும்.

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அணைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523,0817 918 981
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்சரிவு




## மண்சரிவுக்கு காரணமாக அமையும் இயற்கைக் காரணிகள்

- ✱ மலை முகடுகளில் உள்ள மண் சதுப்புத்தன்மை அடைதல்.
- ✱ மண் படை படையாக அதன் ஆழத்திற்கு ஊடுருவியிருத்தல்.
- ✱ உறிஞ்சப்படும் மண் தட்டின் உயரம்.
- ✱ மண் சரிவுப் பகுதிகளில் உள்ள கடினத்தன்மை.
- ✱ மலைச்சரிவுப் பகுதி பருவப் பெயர்ச்சி மழையின் திசையை நோக்கி அமைந்திருத்தல்.
- ✱ அதிக மழைவீழ்ச்சி.

**"அப்பா,மலையகப் பகுதிகளில் வயல்கள் உயரமான பகுதிகளிலிருந்து நீர் வழிந்தோடும் முறையில் அல்லவா வடிவமைக்கப்படுகின்றன?"**

**"ஆமாம் மகனே! பண்டைய காலம் தொட்டு எமது மூதாதையர்கள் விவசாயம் செய்வதற்கு முன்னர் சரியான முறையில் நிலம் வடிவமைப்பதனை நன்கு அறிந்திருந்தனர்"**

**"இந்த முறையில் விவசாய நிலங்களை வடிவமைப்பதனால் நீர் வழிந்தோடுவது இலகுவாக அமையும் அல்லவா?"**

**"ஆமாம். அதுமட்டுமல்ல. மண் அரித்துச் செல்லப்படுதலும் தடுக்கப்படுகின்றது. இதனால், மண் சரிவு ஏற்படாமல் விவசாய நிலங்கள் பாதுகாக்கப்படுகின்றன"**

மழைக்காலம் ஆரம்பித்தவுடன் மலையகப் பகுதிகளில் மண் சரிவு ஏற்படுவது குறித்த செய்திகளை அடிக்கடி அறிய முடிகின்றது. இதனால், ஏற்படும் உயிர் உடைமை இழப்புகள் பாரியதாகும். மண் சரிவுக்கு மலையகப் பகுதிகளில் முறையற்ற வகையில் நிலங்கள் கையாளப்படுகின்றமையும் காரணமாக அமைகின்றது. மண்சரிவினால் அதிகம் பாதிக்கப்படுவது அதற்கு காரணமான மனிதர்களே. அதனால், சரியான முறையில் நிலங்களைக் கையாளுதலும் அது பற்றி சரியான வகையில் அறிந்திருத்தலும் அது பற்றி அனர்த்த முகாமைத்துவத்தில் ஈடுபடுவதும் மண் சரிவினைத் தடுக்கவும் அதனால் ஏற்படும் அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும் உதவும்.

## மண்சரிவு என்றால் என்ன?

நிலத்தில் ஏற்படும் சரிவு நிலைகளை 'மண் சரிவு' என்று அழைக்கலாம். சரிவு ஏற்படும் நிலைகளைப் பொறுத்து அவற்றின் வகைகள் வருமாறு:

## மண் சரிந்து விழுதல்

உயரமான பகுதிகளில் இருக்கும் பாறைகள், மண் தொகுதிகள் என்பன ஈரப்பதன் காரணமாக சரிந்து விழுதல், மண் புரளுதல் என்பன மண் சரிவு எனப்படும்.

## கற்கள் உருண்டு விழுதல்

மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள பாறைகளில் இருந்து கற்துகள்கள் பிரிந்து செல்லும்போது ஏற்படும் வெடிப்புக்களில் நிலக்கீழ் நீரூற்றுக்களிலிருந்து நீர் நிரம்புவது பாறைகள் சரிய காரணமாகின்றது.

## மண் புதைதல்

நிலத்தின் ஏதோ ஒரு பகுதி அதன் மட்டத்திலிருந்து கீழே செல்லுதலை அல்லது புதைவடைதலை இவ்வாறு கூறமுடியும். மண்ணின் இயல்பின் அடிப்படையிலும் மண் நீருடன் கலப்பதனாலும் இந்த நிலை ஏற்பட்டு மண் புதைவடைதலின் வேகம் அதன் தன்மையைப் பொறுத்தே அமைகின்றது.



## ஒரு புறம் தள்ளப்படுதல்

மண் சரிவுப்பகுதி ஒன்று வழுக்கி கீழே செல்வதனைக் குறிக்கின்றது. இவ்வாறு தள்ளப்படும் பகுதியின் மேற்பகுதி முறையற்ற ஓர் இயல்பினைப் பெறுகின்றது. இங்கு நீர் ஊற்றுக்களையும் நீர் வெளிப்படுதலையும் அதிகமாகக் காணமுடியும்.

## அடித்துச் செல்லல்

மண், கற்கள், மணல், களிமண் மற்றும் கற்துணிக்கைகள் அடித்துச் செல்லப்படுதலையே இது குறிக்கும். இதன் வேகம் மணிக்கு 100 மைலாகவும் இருக்கக்கூடும். அதனால், இவ்வாறான மண் சரிவுகள் மிகவும் ஆபத்து மிக்கவை.

## மனித அழுத்தங்கள்

✱ பாரியளவிலான வனப்பகுதிகளை அழிப்பதனால் மண்ணின் இயல்பு மாறுபடுகின்றது. இதனால், நிலவெடிப்பு, மண் அரித்துச் செல்லப்படுதல், மண் சரிவு என்பன ஏற்படுகின்றன.

✱ சரியான திட்டமிடல்கள் அற்ற நிலக் கையாளுகை.

✱ மலை அடிவாரங்களில் மண் அகழுதல், கற்களை உடைத்தல், பாதைகளை அமைத்தல், கட்டடங்களை அமைத்தல், பயிர்ச்செய்கை ஆகிய நடவடிக்கைகளின்போது உரிய வகையில் திட்டமிடாமை இதற்கு உதாரணமாகும்.

✱ நிர்மாணப் பணிகளில் சரியான திட்டமிடல் இன்மை.

✱ சரியான அனுமானம் இன்றி குழிகளை தோண்டுதல், மண்ணால் குழிகளை நிரப்புதல்.

✱ இயற்கையான நீர் வழிகளை தடுத்தல் மற்றும் உயரமான பகுதிகளில் நீரைத் தேக்கி வைத்தல்,நீர் நன்கு வழிந்தோடும் வகையில் பயிர்ச்செய்கை நிலங்களை அமைக்காமை.

## நீங்கள் மண்சரிவு அச்சுறுத்தலுடன் வாழ்கின்றீர்களா?

மண் சரிவுக்கு உட்பட்ட பகுதி இரண்டு வகைப்படும். மண் சரிவுப் பாதிப்புக்கு உட்பட்ட பிரதேசம், பாதிப்புக்கு உட்படக்கூடிய பிரதேசம் என இரண்டு வகைப்படுத்தலாம். மண் சரிவு ஏற்படுவதற்கு முன்னரே அது பற்றிய எதிர்வுகூறல்களை அப்பகுதிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்படாமல் இருக்க....

## மண்சரிவு எமது நாட்டைப் பாதிக்கும் விதம்

மூன்று நாட்களாகத் தொடரும் 200 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி மண் சரிவுக்கு வழி அமைக்கின்றது. அதனால், மழைக்காலத்தில் அவதானமாக இருக்கவேண்டும். அபாயத்திற்குட்பட்ட பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்ற வேண்டும். இதனால், அனர்த்தத்தினைக் குறைத்துக் கொள்ள முடியும்.

மண்சரிவு 15 பாகை-40 பாகை சரிவுள்ள பகுதிகளில் பெரும்பாலும் இடம்பெறுகின்றது. குறிப்பாக வருடாந்த மழைவீழ்ச்சி 1000 மில்லிமீற்றர் 4000 மில்லிமீற்றர் இடைப்பட்ட மலையகப் பகுதிகளில் மண்சரிவு அதிகம் ஏற்படுகின்றது. பேராதெனிய-நுவரெலியா, கண்டி-குருணாகலை வீதி அமைக்கப்படும்போது சரியான வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டமையினால் அப்பகுதிகளில் அதிகளவான மண்சரிவுகள் இடம்பெறுகின்றன. இலங்கையின் 10 மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் நிலவுகின்றது. முறையற்ற நிலக் கையாளுகையே இதற்கு முக்கிய காரணமாகும்.



அனுமானிக்க முடியும்.

✱ நிலப்பகுதியில் வெடிப்பு.

✱ நிலம் புதைதல்.

✱ மரங்கள் வளைதல்.

✱ கற்கள் உருளல்,கற்கள் மெதுவாகத் தள்ளுப்படுதல், நிலப்பகுதி தள்ளுப்படுதல்.

✱ கட்டடங்களில் வெடிப்பு ஏற்படல், இந்த வெடிப்பு பெரிதாகுதல்.

✱ நீரூற்றுகள், சேறு கலந்த நீரூற்றுகள் திடீர் என உருவாதல்.

✱ முன்னர் இருந்த நீரூற்றுகள் மறைந்து போதல்.

ஏதேனும் பகுதிகளில் இந்த அறிகுறிகள் தென்பட்டால், இவை மண் சரிவுக்கான எச்சரிக்கைகளாகவே கருதப்பட வேண்டும். அதனால், சுற்றுப்புறச் சூழல் குறித்து விழிப்புடன் இருங்கள்.

## மண்சரிவினைத் தடுக்க முடியும்

மண்சரிவு ஏற்படாத வகையில் நிலத்தினை கையாள முடியும். மண்சரிவு குறித்து சந்தேகம் ஏற்பட்டவுடன் அப்பகுதியினை பயன்படுத்தாமல் கைவிடக்கூடாது. அதற்கு நவீன முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்த முடியும்.

✱ பாதிப்புக்குள்ளான நிலத்தினை கைவிடாமல் மீண்டும் வடிவமைத்து பயிர் செய்தல். இந்த முறையினால் நீர் நன்கு வழிந்தோடும்.

✱ நீர் நன்கு வழியும் வகையில் காண்களை, வடிகால்களை அமைத்தல்.

✱ மண் சரிவு அபாயப் பிரதேசங்களில் மரங்களை நடுதல்.

✱ மண் அரிப்புக்களைத் தடுக்கும் வெட்டிவேர் Vetiveria (zizamiodes) தாவரங்களை வளர்த்து மண் சரிவினைத் தடுக்க முனைதல்.

✱ உயரமான பகுதிகளை அகற்றி நிலத்தின் சுமையைக் குறைத்து நீர் போக்குவரத்தினை அதிகப்படுத்தல்.

## மண்சரிவினைத் தடுக்கும் அதிக செலவிலான வழிமுறைகளும் உண்டு

✱ மண்சரிவு ஏற்படக்கூடிய மண் தட்டுக்களை கம்பி வேலிகளினால் நிலத்துடன் பிணைத்தல்.

✱ கொன்கிறீட் அல்லது கற்களைப் பயன்படுத்தி மண்ணினால் பாத்திகளை அமைத்தல்.

✱ கொன்கிறீட் தூண்களின் ஊடாக சரிவுப்பகுதியினை பிரதான நிலத்துடன் சேர்த்தல்.

✱ பயிர் நிலங்களை வேறு விடயங்களுக்குப் பயன்படுத்துதல்.

✱ மலைப்பகுதி நிர்மாணிப்புகளைக் கட்டுப்படுத்தல், சரியான தொழில்நுட்ப அறிவினைப் பெறல்.

## மண்சரிவு எதிர்வுகூறல்கள்

✱ கதவு ஜன்னல்கள் இறுக்கமடைதல்.

✱ வீடுகளில் கட்டடங்களில் புதிதாக ஏற்படும் வெடிப்புகள்.

✱ நில மேற்பகுதியில் மற்றும் வீதிகளில் அதிகரிக்கும் வெடிப்புகள்.

✱ நிலத்தின் கீழான குழாய் தொகுதிகளில் பாதிப்பு.

✱ புதிய நீரூற்றுகள் ஏற்படுதல்.

## மண்சரிவு ஏற்படும்போது கட்டடத்திற்குள் இருக்கின்றீர்களாயின்

✱ கட்டடம் பாதுகாப்பான இடத்தில் அமைந்திருந்தால் அங்கேயே பாதுகாப்பாக இருக்க முயலுங்கள்.

✱ நீங்கள் வெட்டவெளியில் இருக்கின்றீர்களாயின், மண்சரிவுப் பகுதியில் இருந்து விலகியிருங்கள்.

✱ மண்சரிவுப் பகுதிக்கு எதிர்த்திசையில் ஓடுங்கள்.

✱ நிலைமைகள் பற்றி அறிந்து கொள்ள வானொலியை செவிமடுங்கள்.

## மண்சரிவு எமது நாட்டைப் பாதிக்கும் விதம்

மூன்று நாட்களாகத் தொடரும் 200 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி மண் சரிவுக்கு வழி அமைக்கின்றது. அதனால், மழைக்காலத்தில் அவதானமாக இருக்க வேண்டும். அபாயத்திற்குட்பட்ட பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்ற வேண்டும். இதனால், அனர்த்தத்தினை குறைத்துக்கொள்ள முடியும்.

மண்சரிவு 15 பாகை-40 பாகை சரிவுள்ள பகுதிகளில் பெரும்பாலும் இடம்பெறுகின்றது. குறிப்பாக வருடாந்த மழைவீழ்ச்சி 1000 மில்லி மீற்றர் 4000 மில்லிமீற்றர் இடைப்பட்ட மலையகப் பகுதிகளில் மண்சரிவு அதிகம் ஏற்படுகின்றது. பேராதெனிய-நுவரெலியா, கண்டி-குருணாகலை வீதி அமைக்கப்படும்போது சரியான வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டமையினால் அப்பகுதிகளில் அதிகளவான மண்சரிவுகள் இடம்பெறுகின்றன. இலங்கையின் 10 மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் நிலவுகின்றது. முறையற்ற நிலக் கையாளுகையே இதற்கு முக்கிய காரணமாகும்.

**இயற்கை அனர்த்தம் ஒன்றினை சந்தித்த போது நீங்களோ அல்லது உங்களைச் சேர்ந்த நபரோ முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்து மிகச் சுருக்கமாக 50-100 சொற்களில் எமக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கத்தை எழுதி அனுப்புவோருக்கு பெறுமதியான புத்தகப் பொதி ஒன்று பரிசாக வழங்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி :**

**அனர்த்தங்களைத் தவிர்ப்போம்**
**ப்ரக்டிக்கல் எக்ஷன், இல 5,**
**லயனல் எதிரிசிங்க மாவத்தை,**
**கொழும்பு-05.**



**விசேட அனுசரணை:**
PRACTICAL ACTION
Intermediate Technology Development Group
**ப்ரக்டிக்கல் எக்ஷன்**
இல. 5, லயனல் எதிரிசிங்க மாவத்தை கொழும்பு-5.
தொலைபேசி: 011 2829412 பெக்ஸ்: 011 2856188
மின்னஞ்சல்: Sri Lanka@practicalaction.org.lk
இணையதளம்: www.janathakshan.net
www.practicalaction.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1912 இல் ஜேர்மனியில் முதலாவது வான் அஞ்சல் சேவை

ஐக்கிய அமெரிக்காவின் வொஷிங்டனிலிருந்து ஆரம்பமான முதலாவது வான் அஞ்சல் சேவை (1918)

# வான் அஞ்சல் சேவை

**வான் அஞ்சல் சேவை அல்லது விமான அஞ்சல் சேவை என்பது விமானங்களினூடாக மேற்கொள்ளப்படும் தபால் சேவையைக் குறிக்கின்றது. சாதாரண தபால் சேவைகளிலும் கூடிய சேவைக்கட்டணம் இதற்காக அறவிடப்படுகின்றது. வெளிநாடுகளுக்கு விரைவாக அஞ்சல்களை அனுப்பி வைக்க விமான அஞ்சல் சேவை துணை புரிகின்றது.**

முற்காலத்தில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு தகவல்களைப் பரிமாறிக் கொள்ள புறாக்கள் பயன்படுத்தப்பட்டன. இதனை வான் அஞ்சல் சேவையின் ஆரம்பம் என்றும் அடையாளப்படுத்தலாம். அதனை அடுத்து 1785, ஜனவரி 7 ஆம் திகதி டோவெரிலிருந்து பிரான்ஸுக்கு பலூன்கள் மூலம் வான் அஞ்சல் சேவை அறிமுகப் படுத்தப்பட்டது.

1903 ஆம் ஆண்டு ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, 1911 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் நடைபெற்ற வைபமொன்றின்போது முதலாவது பரீட்சார்த்த விமான அஞ்சல் சேவை நியூயோர்க் அஞ்சல் அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. அதன்போது விமானம் சுமந்து செல்லும் அஞ்சல் பொதிகள் உரிய இடங்களில் வைத்து தரையை நோக்கி வீசப்பட்டதோடு, குறித்த தபால் நிலைய தபால் அதிபர்கள் தரையில் விழுந்த தபால் பொதிகளை எடுத்து வந்தனர். இவ்வாறான 52 பரீட்சார்த்த நடவடிக்கைகள் 1911-1912 வரையான காலப்பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டன.

இதேவேளை, 1911 ஆம் ஆண்டில் இந்தியாவில் அழகாபாத்திலிருந்து நைனி பிரதேசங்களுக்கிடையில் 6,500 கடிதங்களை சுமந்தவாறு முதலாவது உத்தியோகபூர்வ விமான அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளிலும் விமான அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்டது.




## இலங்கையில் வான் அஞ்சல் சேவை

20 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிதான் இலங்கையின் வான் அஞ்சல் சேவையின் ஆரம்பகாலமாகும். முதன்முதல் விமானம் மூலம் அஞ்சல் சேவை 1938 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி மிகவும் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த விமான அஞ்சல் சேவை குறித்த செய்தி இலங்கையின் தேசிய நாளிதழ்களில் ஒன்றான 'தினமின' பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

## விமான நிலைய திறப்பு விழா

இன்று ரத்மலானையில் நடைபெறவுள்ள மாபெரும் உற்சவம்; பேரரசின் விமான அஞ்சல் சேவை இன்று. முற்பகல் 8.30 மணியளவில் ஆளுநர் அவர்களால் ரத்மலானை விமான நிலையம் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படும். இத்துடன், இலங்கையை பேரரச விமான நடவடிக்கையுடன் இணைக்கும் செயல்பாடும் ஆரம்பிக்கப்படும். இதன் காரணமாக முழு உலகமும் எமது வாசலை நெருங்கிவிடும்.

## விசேட விமான சேவை

இந்த விழாவுக்கென விசேட விமானமொன்று நேற்று இந்தியாவில் இருந்து வந்தது. இதில் கலந்து கொள்வதற்காக திருகோணமலையின் பிரதான கடற்படை அதிகாரி அங்கிருந்து ரத்மலானை விமான நிலையத்திற்கு கடற்படைக்குரிய விமானத்தில் வருகை தருவார். அதேவேளை, ஆளுநரும் விமான நிலையத்திற்கு வருகை தரவுள்ளார். இவ் இருவரும் முற்பகல் 8.30 மணிக்கு வருகை தரவுள்ளனர்.

முற்பகல் 8.35 மணியளவில் பெருந்தெருக்கள் மற்றும் தொழில்துறை அமைச்சர் விமானநிலையத்தை திறந்து வைக்கும்படி ஆளுநருக்கு அழைப்பு விடுப்பார். அத்துடன் 8.40 க்கு ஆளுநர் விமானநிலையத்தைத் திறந்து வைத்து, முதலாவது இந்திய-இலங்கை விமான தபால் சேவையை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவார். அவரின் உரையும் அமைச்சரின் உரையும் வானொலி மூலம் ஒலிபரப்பப்படும்.

## பேரரசின் முதலாவது வான் அஞ்சல்

ஐந்து நிமிடங்கள் கழித்து, இலங்கையின் முதலாவது பேரரசுக்குரிய வான் கடிதங்களை சுமந்தவாறு விமானம் தனது பயணத்தை ஆரம்பிக்கும். அதன்பின் இலங்கையின் ஆகாயத்துறைக்கழகத்தின் தலைவரும் நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தொழில் அமைச்சரால் ஆளுநருக்கு அறிமுகப்படுத்தப்படுவர்.

இதனைத் தொடர்ந்து, விமான நிலையக் கழகத்திற்கு சொந்தமான விமானங்கள் மற்றும் கடற்படை விமான செலவினங்கள் காட்சிக்கு வைக்கப்படும். அத்தோடு நிகழ்வு நிறைவு பெறும்.

வான் அஞ்சல் மூலம் அனுப்பப்படும் கடிதங்களில் ஆளுநரின் மூன்று கடிதங்களும் அடங்கும். அதில் குடியேற்ற நாட்டுச் செயலாளர் டபிள்யூ.ஜி.ஒம்ஸ்கோர் அவர்களின் பெயருக்கு ஒரு கடிதமும் ஏனைய இரு கடிதங்கள் பம்பாய் (இன்றைய மும்பாய்) மற்றும் சென்னை ஆளுநர்களுக்கும் அனுப்பப்படும். விசேட பின்புலத்துடன் அனுப்பப்படும் இக்கடிதங்கள் இச்சந்தர்ப்பத்தை நினைவுகூருவதற்கு ஆளுநரை வரவேற்கும் விதத்தில் வெள்ளி முத்திரையிடப்பட்டு அனுப்பப்படும்.

கோல்டிகோட் சீமாட்டியும் கோல்டிகோட் இளம் சீமாட்டியும் ஆளுநருடன் விமானத்தில் செல்வர். தபால் அதிபர் ஜெனரல் ஜே.எல்.வோல்டர்ஸ் அவர்களின் மகளாகிய ஜோஆன் வோல்டர்ஸ் அவர்களால் இவ்விருவருக்கும் இரு மலர்ச்செண்டுகள் வழங்கி வரவேற்கப்படும்.

*(நன்றி: அரசாங்க சுவடிகள் திணைக்களம்)*




இந்திரஜித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மீட்பர் பிறந்தநாள்



மார்கழி மாதம் பிறந்தவுடன் உலகெங்கும் வீசும் குளிர்காற்றுடன் மக்கள் மனதில் இனம்புரியாத ஒரு குதூகல உணர்வும் உற்சாக மனப்பான்மையும் ஏற்படுவதுண்டு. சிறுவர்களைப் பொறுத்தவரையில் இந்த மகிழ்ச்சி இரட்டிப்பாக காணப்படுவதற்கு விடுமுறை காலமாக இருப்பதும் மற்றொரு காரணமாகும்.

இவை தவிர மார்கழி மாதத்தில் உலகெங்கும் நத்தார் பண்டிகை கொண்டாடப்படுவதும் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடுவதற்கு காரணமாக அமைகின்றது. இந்த நத்தார் பண்டிகை கொண்டாடப்படுவதன் நோக்கம் மற்றும் அந்தப் பண்டிகையுடன் தொடர்புடைய பல்வேறு சுவையான அம்சங்களையும் பகிர்ந்து கொள்வோம்.

## அர்த்தமுள்ள நத்தார் பண்டிகை

இற்றைக்கு ஏறக்குறைய 2008 ஆண்டுகளுக்கு முன் மத்திய கிழக்கில் பெத்லகேம் நகரில் சூசை என்பவருக்கும் கன்னி மரியாளுக்கும் மகனாக அவதரித்த இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் நல்ல நாளே நத்தார் அல்லது கிறிஸ்மஸ் பண்டிகையாகும். உலக இரட்சிப்பிற்காக இப்பூவுலகில் மனிதனாகப் பிறந்து அதன் மூலம் ஏற்பட்ட மாற்றத்திற்கு அவரது பிறப்பே காரணம் என்ற அடிப்படையில் நத்தார் கொண்டாட்டத்திற்கு அர்த்தம் கொள்ளப்படுகிறது. ஏழ்மையில் பிறந்த அவரது பிறப்பும் உலகிற்கு ஒளியாய்த் திகழ்ந்த அவரது வாழ்வும் கூட இந்நாளில் நினைவு கூரப்படுவதுண்டு.



## கிறிஸ்துவின் பிறப்புக் குறித்து வேதாகமம் கூறுவது

அப்பொழுது யோசேப்பும் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாய் இருந்தபடியினால், தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியாளுடன் குடிமதிப்பெழுதப்படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான். அவ்விடத்தில் அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்.

அப்பொழுது, அந்த நாட்டில் மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, ராத்திரியில் தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில், கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது. அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கிப் "பயப்படாதிருங்கள். இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து எனும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" என்றார். அக்கணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடன் தோன்றி, **உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக** என்று கூறி, தேவனைத் துதித்தார்கள்.

இவ்வாறு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து 'வேதாகமம்' குறிப்பிட்டுள்ளது.

## சமாதானப் பெருவிழா

சமாதானத்தின் இறைவனாக மதிக்கப்படும் கிறிஸ்து சமாதானத் தூதனாக தோன்றியதாக கிறிஸ்தவ உலகம் கூறுகின்றது. அவர் இவ்வுலகில் தோன்றியது தமது சக்தியை நிரூபிப்பதற்கில்லை. மாறாக, உலகை மீட்டு இரட்சிக்கவே அவதரித்தார். அன்று பிறந்த அவர் அறியாததை அறிந்துகொள்ளும் ஒரு நல்மாணவனாக, முன்மாதிரியான ஓர் இளைஞனாக, சமூகத்திற்கு வழிகாட்டும் நல்ல தலைவனாக வாழ்ந்து காட்டினார். இந்த உன்னத மீட்பர் பிறந்த தினமான நத்தார் தினத்தைக் கொண்டாடும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் வாழ்க்கையை ஒரு நல்ல முன்மாதிரியாக மனதில் கொண்டு வாழ்வை நல்ல முறையில் செப்பனிடுவோடுமாக.

## கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள்



கிறிஸ்மஸ் தினத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களில் ஆராதனைகளே மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. இதில் பெருமளவிலான கிறிஸ்தவர்கள் குடும்பத்துடன் கலந்து கொள்வதோடு அதன் பின்னர் பல கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்வர்.

இக்கொண்டாட்டங்களிலும் நத்தார் தாத்தா, நத்தார் மரம் (X'mas Tree) நத்தார் மெழுகுதிரி, நத்தார் மணி, வால் நட்சத்திரம்,நத்தார் கேக், நத்தார் புடின், நத்தார் காலுறை, நத்தார் பரிசு வண்டி, வானதூதர், அலங்கார வளைவுகள் உள்ளிட்ட பல்வேறு அலங்காரப் பொருட்கள் என இன்னோரன்ன பல்வேறு விடயங்கள் கொண்டாட்டங்களுக்கு அணி சேர்க்கின்றன.

## வால் நட்சத்திரம்



இயேசு கிறிஸ்துவின் பிறப்பின்போது வானில் தோன்றிய வால் நட்சத்திரத்தையும் அதனை அடையாளமாகக் கொண்டு மூன்று அரசர்கள் இயேசுவை தரிசிக்க வந்ததை நினைவு கூருமுகமாக இன்றும் நத்தார் அலங்காரத்தின்போது குடில்களின் உச்சியிலும் நத்தார் மரஉச்சியிலும் தேவாலயங்களிலும் வீடுகளிலும் வால்நட்சத்திரங்களைப் பயன்படுத்துவர்.

## 'பாலன் குடில்'



உலகின் முதலாவது 'பாலன் குடில்' அமைத்த பெருமைக்குரியவர் வண.பிதா. பிரான்சிஸ் என்னும் குருவானவராவார். ஏறக்குறைய 2008 ஆண்டுகளுக்கு முன் பெத்லகேம் நகரில் மாட்டுத்தொழுவத்தில் சூசைக்கும் மரியாளுக்கும் மகனாய் அவதரித்த பின் பாலன் இயேசுவையும் அவரது பெற்றோரையும் அவரைத் தரிசிக்க வந்த வானதூதர், இடையர்கள் மற்றும் சில ஆடு மாடுகளைக் கொண்ட காட்சியை சித்தரித்து செயற்கையாக உருவாக்கப்பட்டதே 'பாலன் குடில்' ஆகும். நத்தார் பண்டிகையை கொண்டாடும் இடங்களில் இந்தக் 'பாலன் குடில்' முக்கியமாகக் காணப்படும்.

## கிறிஸ்மஸ் தாத்தா



குழந்தைகளைக் குதூகலிக்க வைக்கும் கிறிஸ்மஸ் தாத்தா நத்தார் கொண்டாட்டங்களில் முக்கிய விருந்தினர் ஆவார். 'சென்டா க்ளோஸ்' என அழைக்கப்படும் இவர் துருக்கி நாட்டில் இருந்து உலகிற்கு அறிமுகமானார். புனித நிக்கலஸ் என்பவர் அங்கு ஏழைக்குழந்தைகளுக்கு நத்தார் தினத்தன்று பரிசில்களை வழங்கினார். தன் வாழ்நாள் முழுவதும் தனது சொத்துக்கள் முடியும் வரை இவ்வாறு பரிசுகள் வழங்கிய அவர் கி.பி 341 டிசம்பர் 6 ஆம் திகதி அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரைத் தொடர்ந்தே இந்த வழக்கம் உலகெங்கும் பரவியது.

## தேவ தூதர்கள்



இயேசுவின் பிறப்பை முதன்முதலாக உலகெங்கும் பரப்பிய தேவதூதர்களை, 17 ஆம் நூற்றாண்டு முதல் இத்தாலி நாட்டில் அமைக்கப்பட்ட நத்தார் குடில்களில் அறிமுகப்படுத்தினர். நாளடைவில் இது உலகெங்கும் பரவியது. தேவதூதர்கள் சாந்தி மற்றும் சமாதானத்தின் அடையாளமாகக் கருதப்படுவதால் பின்னர் வீடுக்ள் தோறும் அலங்காரத்திற்குப் பயன்படுத்தினர்.

## நத்தார் மெழுகுவர்த்தி



இயேசுவே உலகிற்கு உண்மை ஒளி என்பதைக் குறிப்பதற்காக நத்தார் அலங்காரத்தின்போது அலங்கரிக்கப்பட்ட மெழுகுவத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், நத்தார் மரத்தை அலங்கரிக்க அதிகளவு மெழுகுவத்திகளை மார்ட்டின் லூதர் பயன்படுத்திய காரணத்தால் நத்தார் மெழுகுவத்திக்கு மவுசு அதிகரிக்கத் தொடங்கியது.

## நத்தார் கேக்



பிரித்தானிய கலாசாரத்தில் விசேட கிறிஸ்மஸ் கேக் ஆக (Duml cake) இதனைக் கருதுகின்றனர். இதனை 'ஊமைப் பலகாரம்' என்றும் அழைக்கின்றனர். திருமணமாகாத இளம் வயதினர் நத்தார் தினத்திற்கு முந்திய நாள் மாலை முதல் யாருடனும் பேசாமல் மௌனமாகவே இதனைச் செய்து முடிக்க வேண்டுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்சானியா



| | |
|---|---|
| தலைநகர்: | டோடோமா |
| பெரிய நகரம்: | தாருஸ் ஸலாம் |
| அர்ச கருமமொழி: | ஸ்வாஹிலி மற்றும் ஆங்கிலம். |
| அரசு: | குடியரசு |
| ஜனாதிபதி: | ஜகயா மிர்ஷோ கிக்வெட் |
| பிரதமர்: | மிசென்கோ பிண்டா |
| மொத்த நிலப்பரப்பு: | 945,203 சதுர கிலோமீற்றர். |
| நாணயம்: | டினார் |
| நேரம்: | கிரீன்வீச் நேரத்தை விட 3 மணித்தியாலங்கள் முன்னால். |
| இணையத்தளக் குறியீடு: | .ly |
| சர்வதேச தொலைபேசி இலக்கம்: | +218 |

## அமைவிடம்

ஆட்சிமுறையில் குடியரசாகிய தன்சானியா, ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. பிரதான தீவாகிய ஸென்ஸிபார் தீவு உள்ளிட்ட மேலும் பல சிறிய தீவுகள் பலவற்றைக்கொண்ட தன்சானியாவின் பெருநிலப்பரப்பின் வடக்கே கென்யாவும் உகண்டாவும் மேற்கே ருவண்டாவும் புருண்டி நாடும் அமைந்துள்ளது. மேலும், தென்மேற்கில் கொங்கோ ஜனநாயகக் குடியரசும் தெற்கில் செம்பியாவும் மலாவியும் மொஸாம்பிக் நாடும் எல்லைகளாக அமைந்துள்ளன. தன்சானியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள இந்து சமுத்திரத்தில் ஸென்ஸிபார் தீவு உள்ளிட்ட தன்சானியாவுக்குச் சொந்தமான பல சிறிய தீவுகள் அமைந்துள்ளன. பரப்பளவில் உலகில் 31 ஆவது இடத்தை வகிக்கும் இந்நாடு, 26 மாகாணங்களையும் 98 மாவட்டங்களையும் கொண்டுள்ளது.

## தரைத்தோற்றம்

தன்சானியாவின் தரைத்தோற்றத்தைப் பொறுத்தவரையில் கிழக்குப் பகுதியில் மலைகள் நிறைந்த உயர் பிரதேசமாகக் காணப்படுகின்றது. வடக்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களில் குளங்கள் மற்றும் ஏரிகள் நிறைந்து காணப்படுவதோடு, மத்திய பிரதேசம் பாரிய சமவெளிகளையும் பல்வேறு நிலவுருவங்களையும் கொண்டு காணப்படுகின்றது.

விக்டோரியா ஏரி,கிளிமஞ்சாரோ மலை போன்ற உலகப் புகழ் வாய்ந்த தரைத்தோற்ற அம்சங்களைக் கொண்ட நாடுதான் தன்சானியா.

## 'மாஜி மாஜி'

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிழக்கு ஆபிரிக்காவின் ஜேர்மனிய காலனித்துவ சக்திகள் பெருமளவில் பருத்திப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டன. இதில் வேலை செய்யக் கறுப்பின மக்களைப் பிடித்த ஜேர்மனிய இராணுவம் அவர்களை அடித்து, உதைத்து வேலை வாங்கியது. இதனை எதிர்த்தவர்கள் சித்திர வதைக்குள்ளானார்கள். இதன் உச்சக் கட்டமாக 1905 இல் கல்வா பகுதியில் உருவெடுத்த கலவரம் பின்பு




தன்சானியா முழுவதும் பரவியது. விவசாய நிலங்களைத் தீயிட்டு ஜேர்மனிய இராணுவம் இதற்குப் பதிலடி கொடுத்தது. இதனால், ஆயிரக்கணக்கான மக்கள் உண்ண உணவின்றிப் பசியால் மடிந்தனர். இராணுவத்தின் துப்பாக்கி ரவைகள் தம் உடலில் பாய்ந்தால் அதிலிருந்து தண்ணீர் பீறிட்டு பாயும் என நம்பிய அப்பாவி மக்கள், துப்பாக்கிகளுக்கு நேரே தம் மார்பைத் திறந்து காட்டினர். அதனால், பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஸ்வாஹிலி மொழியில் 'மாஜி' என்றால் 'தண்ணீர்' என்று பொருள். இதனால் தான் இக் கலவரம் 'மாஜி மாஜி' கலவரம் எனப் பெயர் பெற்றது.

## மதமும் மக்களும்

தன்சானியவின் பெருநிலப்பரப்பில் வாழும் பெரும்பான்மையானோர் ஆபிரிக்க மக்களாவர். அவர்கள் பல்வேறு ஆபிரிக்க கறுப்பின கோத்திரத்தார்களின் வழித்தோன்றல்கள் ஆவார்கள். இவர்களைத் தவிர, ஆசியாவைச் சேர்ந்தவர்களும் ஐரோப்பியரும் அரேபியர்களும் சிறுபான்மையினராக இங்கு வாழ்கின்றனர்.

ஆனால், ஸென்ஸிபார் தீவின் மொத்த சனத்தொகையில் அரேபியர் பெரும்பான்மையாகவும் ஆபிரிக்கர்களும் கலப்பின மக்களும் சிறுபான்மையினராகவும் வாழ்கின்றனர்.

மதத்தை பொறுத்தவரையில் கிறிஸ்தவமும் இஸ்லாமும் பிரதான மதங்களாக விளங்குவதோடு, உள்நாட்டு நம்பிக்கைகளும் நிலவுகின்றன.



## வரலாறு

இந்நாட்டில் கி.பி 700 ஆம் ஆண்டளவில் அரேபிய வர்த்தகர்கள் தமது குடியேற்றங்களை ஆரம்பித்தனர். போர்த்துக்கேய சஞ்சாரிகளும் நாடுகாண் பயணிகளும் கி.பி. 1500 ஆம் ஆண்டளவில் கரையோர தன்சானிய பிரதேசங்களுக்கு வருகை தந்து, 17



ஆம் நூற்றாண்டில் ஒட்டோமன் சுல்தான்களின் ஆதிக்கத்திற்கு உட்படும்வரை தன்சானிய மக்களைத் தமது ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர்.

அதன்பின் கி.பி 1885 இல் புருண்டி மற்றும் ருவண்டா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 'தங்கனிக்கா' பிரதேசம் ஜேர்மனிய கிழக்கு ஆபிரிக்க குடியேற்றமாக உருவாக்கப்பட்டு, ஜேர்மனின் ஆட்சியின் கீழ் இருந்தது. முதலாம் உலக யுத்தத்தின் பின் தங்கனிக்கா பிரதேசம் பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் வந்தது. புராதன வரலாற்று ஆவணங்களின்படி, 12 ஆம் நூற்றாண்டில் ஸென்ஸிபார் பிரதேசம் தென் அரேபியாவுடன் தொடர்பு கொண்டிருந்தது. கி.பி 1503 இல் போர்த்துக்கேயர் இதனைக் கைப்பற்றினாலும் கி.பி 1698 இல் அரேபியர்கள் அவர்களை விரட்டி அடித்தனர். பின் கி.பி 1890 இல் இந்த ஸென்ஸிபார் பிரதேசம் பிரித்தானியரின் பாதுகாப்புப் பிரதேசமாகியது. கி.பி 1961 டிசம்பர் 9 ஆம் திகதி தங்கனிக்கா பிரதேசமும் 1963 டிசம்பர் 10 ஆம் திகதி ஸென்ஸிபார் பிரதேசமும் சுதந்திரமடைந்தன.





1964 ஏப்ரல் 26 ஆம் திகதி தங்கனிக்கா மற்றும் ஸென்ஸிபார் மக்கள் ஐக்கிய குடியரசாக ஒன்றிணைந்தனர். அதன்பின் 6 மாதங்கள் கழித்து, அந்நாட்டுக்கு 'தன்சானியா' என புதிய பெயர் சூட்டப்பட்டது.

## பொருளாதாரம்

தன்சானியாவின் பிரதான பொருளாதாரத்துறை விவசாயமாகும். அவர்களின் முக்கிய வர்த்தகப் பயிர்களாக கோப்பி,தேயிலை,பேரீச்சை, நெல், நிலக்கடலை, புகையிலை, பருத்தி, சோளம், கொப்பரா, மரமுந்திரிகை மற்றும் கராம்பு ஆகியன விளங்குகின்றன. அத்துடன், நாட்டு மக்களில் பெரும்பான்மையானோர் விலங்கு வேளாண்மையிலும் ஈடுபடுகின்றனர். கைத்தொழில் துறையைப் பொறுத்தளவில் விவசாய நடவடிக் கைகளுக்குத் தேவையான இயந்திரங்களையும் இயந்திர உபகரணங்களையும் உற்பத்தி செய்கின்றனர். வைரம், தங்கம், இரும்பு என்பன அகழ்ந்தெடுக்கப்படுவதும் உப்பு, சீமெந்து, மரத்தளபாட உற்பத்தி, பசளை உற்பத்தி என்பனவும் தன்சானியாவின் முக்கிய பொருளாதார முயற்சிகளாக இருக்கின்றன. இவை தவிர எண்ணெய், பாதணிகள், புடைவை என்பனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்துடன், தங்கம் மற்றும் இயற்கைவாயு உள்ளிட்ட இயற்கை வளங்கள் பலவும் இந்நாட்டிற்கு வளம் சேர்க்கின்றன.

நாட்டின் முக்கிய வர்த்தகத் தொடர்புகள் ஜப்பான், கென்யா, இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எலிகேடர்' உலகிலிருந்து விடைபெறுமா?



200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உலகில் வாழ்ந்து வரும் ஒரு வகையான பெரிய முதலை இனம்தான் இந்த எலிகேடர் (Alligator). 'எல் லகார்டோ' (el lagarto)எனும் ஸ்பானிய மொழிச் சொல்லிலிருந்து மருவி வந்த சொல்தான் 'எலிகேடர்'. ஸ்பானிய மொழியில் 'எல் லகார்டோ' என்றால் 'பல்லி' என்று அர்த்தம்.

சீனாவிலும் அமெரிக்காவிலும் இந்த முதலை இனத்தை காணமுடியும். அதில் ஒன்று அமெரிக்கன் எலிகேடர்



(American Alligator); மற்றையது சைனீஸ் எலிகேடர் (Chinese Alligator). பருமனான உடலமைப்பைக் கொண்ட இந்த முதலைகளை திரைப்படங்களிலும் காணக்கூடியதாகவுள்ளன.

இவ்வின முதலையொன்றின் நிறை சுமார் 800 இறாத்தல் இருக்கும். சாதாரணமாக 13 அடி (4 மீற்றர்) நீளமுடையது. உலகில் மிகப் பெரிய எலிகேடர் 17 அடி 5 அங்குலத்தினைக் கொண்டிருந்தது. இந்த முதலை அமெரிக்காவின் ஃப்ளோரிடாவில் வாழ்ந்து வந்துள்ளது. அமெரிக்கன் எலிகேடரை விட சைனீஸ் எலிகேடர் அளவில் சிறியதாகும். இது 7 அடி நீளம் கொண்டது. இந்த 'சைனீஸ் எலிகேடர்' உலகிலுள்ள ஊர்வனவற்றில் மிக வேகமாக ஊர்ந்து செல்லக் கூடிய ஆற்றலினைக் கொண்டுள்ளது.

இந்த முதலை இனம் பொதுவாக 50 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழக் கூடியது.

அமெரிக்கன் எலிகேடர்கள் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. அத்துடன், எலிகேடர்களை வளர்ப்பவர்கள் வருடாந்தம் அதிக பணவருவாயினை பெற்றுக் கொள்கின்றனர். அவற்றின் இறைச்சி மற்றும் தோல் சந்தைகளில் அதிக விலைக்கு விற்கப்படுவதே இதற்குக் காரணமாகும். டெக்சாஸ், ஃப்ளோரிடா ஆகிய நகரங்களில் இவை பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. வருடாந்தம் 45,000 எலிகேடர்களின் தோல்கள் பெறப்படுவதுடன், 6-7 அடி நீளம் கொண்ட எலிகேடர் தோல் 300 அமெரிக்க டொலருக்கு விற்கப்படுகின்றது.

## 2008 தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



ப/வெளிமடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.வை.பாத்திமா பர்வின், 125 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் கோட்டகொடையைச் சேர்ந்த எம்.எம்.யூசுப்-எஸ்.மரியம் பீபீ தம்பதியினரின் புதல்வியாவார்.



க/ஜப்பார் மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் எம்.எஸ்.எப்.சிப்னா, 129 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் கலகெதரவைச் சேர்ந்த ஏ.ஆர்.எம்.சிராஜ்-ஜே.ஏ.சரீனா தம்பதியரின் புதல்வியாவார்.




## வாழ்க்கையில் வெற்றி பெற....

நாம் வாழ்க்கையில் வெற்றியாளராகக் கருதப்பட வேண்டுமென்றால், ரால்ப்வால்டோ எமர்ஸன் சொல்வதைக் கேளுங்கள்.

- அடிக்கடி சிரிப்பது; அதிகம் சிரிப்பது.
- புத்திசாலிகளின் நேசத்தைப் பெறுவது.
- குழந்தைகளின் பாசத்தைப் பெறுவது.
- நேர்மையான விமர்சகர்களின் பாராட்டைப் பெறுவது.
- நண்பர்களின் துரோகத்தைத் தாங்கிக் கொள்வது.
- இயற்கையை ரசிப்பது.
- ஒரு தோட்டவெளியை உருவாக்குவது.

இவற்றில் ஏதாவது ஒன்று இருந்தால்கூட நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்றிடுவீர்கள்.

ஜெ.டிசோகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறதியை மறுக்கா




**'மறதி' என்பது நாம் எதிர்நோக்கும் பொதுவான ஒரு பிரச்சினை. நம்மை அறியாமல் நம்மைத் தொற்றிக் கொண்டுள்ள இந்த மறதியினால் நமக்கு நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. சில விடயங்களை நாம் மறப்பது நன்று. அவ்வாறே, சில விடங்களை மறப்பது நன்றன்று.**



## கணினிக்கு ஒப்பானது

மனிதனின் நினைவாற்றல் செயற்பாடானது கணினியின் செயற்பாட்டிற்கு ஒப்பானதாகும். பல லட்சம் ஆண்டுகளாக நடைபெற்ற பரிணாம வளர்ச்சியின் பெறுபேறாகவே இது இருக்கின்றது. நினைவாற்றல் என்பது அனைத்து மனிதருக்கும் பொதுவான விடயமாகும்.

பரீட்சையில் சித்தி பெறவே நினைவாற்றல் அவசியம் என்று பலரும் கருதுகின்றனர். இது தவறான கருத்தாகும். எமது அனைத்து செயற்பாடுகளுக்கும் நினைவாற்றல் மிக அவசியமாகும். நினைவாற்றல் இல்லாவிட்டால் மனிதனால் பாதுகாப்பாக வாழ முடியாது.


நினைவாற்றலினை மூன்று வகைப்படுத்தலாம்.

- தற்காலிக நினைவு.
- குறுகிய கால நினைவு.
- நீண்ட கால நினைவு.

இந்த மூன்று நினைவாற்றல்களுக்கும் பயிற்சியும் பயன்பாடும் அவசியமாகும். ஏதாவது ஒரு விடயத்தினை நினைவிற்கொள்ள வேண்டுமாயின், அவ்விடயத்தினை மீளப் பயன்படுத்தி பயிற்சி பெறுதல் அவசியமாகும். பொதுவாக அனைவருக்கும் இந்த இரண்டு விடயங்களும் அவசியமாகும். எனினும், விசேடமாக மாணவர்களைப் பொறுத்தவரையில் எந்தவொரு பாடத்தையும் அடிக்கடி மீட்டிப் பார்த்து பயிற்சி பெற்றீர்களாயின் அந்தப் பாடம் விரைவில் மனதில் பதிந்து விடும். அவை நீண்டகால நினைவுப் பகுதியில் சேர்ந்துவிடும். பரீட்சைக்கு ஆயத்தமாகின்றவர்கள் முன்பிருந்தே கடந்தகால வினாத் தாள்களுக்கு விடையளித்துப் பயிற்சி பெற்றீர்களாயின், பரீட்சையில் துரித கதியில் விடையெழுதக் கூடிய ஆற்றலைப் பெறுவீர்கள்.

## பயனுள்ள விடயங்களில் கவனம் செலுத்துதல்

ஒய்வின்றி வேலைகளில் ஈடுபடுவோருக்கு மறதி அதிகமாக இருக்கும். காரணம் அவர்கள் தமது தனிப்பட்ட விடயங்களுக்குப் பதிலாக வேறு பல விடயங்களை நினைவில் கொள்வதாகும். இவ்வாறானவர்கள் தங்களின் சொந்த விடயங்களையே மறந்து விடுவார்கள். எனவே, எவரும் தமக்குத் தொடர்பில்லாத விடயங்கள் குறித்து அதிக அக்கறை கொள்ளத் தேவையில்லை. எப்பொழுதும் பயன்தரும் விடயங்களை மனதில் நிலை நிறுத்தி, பயனற்றதை ஒதுக்கிவிடல் வேண்டும். மாணவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவதானது கற்றல் நடவடிக்கைகளுக்குப் பெரிதும் துணை புரியும்.




## மறதி என்பது ஒரு நோயா?

நீங்கள் எவ்வளவுதான் பாடங்களைக் கற்றாலும் அவை நினைவிற்கு வரவில்லையாயின், நீங்கள் அதனை ஒரு நோயாகக் கருதக்கூடும். ஆனால், மறதி என்பது ஒரு நோயல்ல. மாறாக, ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட அளவு நினைவாற்றல் சக்தியே உள்ளது. அதனை மீறிச் செல்ல எவராலும் இயலாது. கணினிக்கும் தகவல்களை சேகரித்து வைப்பதற்கென்று ஒரு கொள்ளளவு உண்டு. அதனைப் போன்று எமது மூளைக்கும் நினைவாற்றலை சேகரித்துக் கொள்வதற்கான கொள்ளளவு உண்டு. மறதி என்பது எமக்குக் கட்டாயம் தேவை. அப்பொழுதுதான் எமக்கு தேவையற்றதை அழித்து புதிய விடயங்களை உள்ளடக்கி வைக்கலாம். தவிர, மாணவர்களுக்கு மறதி ஏற்படுவதற்கு ஏதுவான சில காரணங்கள் உள்ளன.




## நினைவாற்றலைப் பாதிக்கும் உளரீதியிலான குழப்பங்கள்

எந்த ஒரு விடயத்தினையும் நினைவில் கொள்வதிலும் மறப்பதிலும் செல்வாக்குச் செலுத்துவது எமது உள்ளமாகும். நினைவாற்றலுக்குத் தடையாக இருக்கும் அவ்வாறான உளக்குழப்ப நிலைகள் பின்வருமாறு:

- பாடங்களைக் கற்பதுடன் தொடர்பற்ற வேறு விடயங்களுக்கு குறிப்பாக நண்பர்கள் தொடர்பு, கணினி விளையாட்டுகள் என்பனவற்றுக்கு முதவிடம் கொடுக்கப்படுமிடத்து நினைவாற்றல் குறைந்துவிடும்.
- தொலைக்காட்சி, கைத்தொலைபேசி, என்பனவற்றுக்கு அடிமையாதல்.
- உள ரீதியிலான குழப்ப நிலைகளினா (குடும்பப் பிரச்சினைகள், தந்தையின் போ பெற்றோரால் கைவிடப்படல், பிடிவாத நி
- மனநோய்கள் ( நீண்ட கால உடல் பா கட்டுப்படுத்திக்கொள்ள முடியாத நடத்தை துக்கு அடிமையாதல்)

## நினைவாற்றலை அதிகரி

- கற்கும் விடயத்தில் ஆர்வம் காட்டுதல்
- கற்கும் விடயம் குறித்து முழு விளக்க ஆங்கிலத்தில் Helicopter view என்று கூறு
- (பாடங்களை) அடிக்கடி மீட்டிப் பார்த்
- குழப்பமற்ற மனநிலையினைக் கொண்
- நினைவு கூரத்தக்க எளிய நடைமுறை புக்கள், படங்களூடாக விளக்கங்களை அறி இன்னொன்றுடன் சம்பந்தப்படுத்தி நினைவ
- பாடம் படிக்கும் சூழல் சிறப்பானதாக
- சிறந்த போஷாக்கு நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாமல் மறப்போம்



...ாலைபேசி, கணினி விளையாட்டுக்க்ள் ...ல்.

...லைகளினால் ஏற்படும் பாதிப்புகள் ...தயின் போதைப்பழக்கம், வறுமை, ...பிடிவாத நிலை என்பன)

...ல உடல் பாதிப்பினால் தம்மால் ...ாத நடத்தைகள் உ+ம் : போதைப்பழக்கத்

## ...அதிகரிக்க வேண்டின்....

...ம் காட்டுதல்.

...ழு விளக்கம் இருத்தல். இதனை ...ு என்று கூறுவர்.

...ட்டிப் பார்த்தல்.

...னைக் கொண்டிருத்தல்.

...நடைமுறைகளைப் பின்பற்றல். (சிறு குறிப் ...ங்களை அறிந்து வைத்திருத்தல், ஒன்றை ...த்தி நினைவில் வைத்திருத்தல்)

...ப்பானதாக இருத்தல்.

✱ சிறந்த ஆரோக்கிய நிலைமை.



## ஆர்வமும் நினைவாற்றலும்

குறித்த ஒரு விடயத்தில் ஆர்வம் இன்மை காரணமாகவே மறதி ஏற்படுகின்றது. இது கல்வி கற்கும் மாணவ, மாணவியருக்கு நன்கு பொருந்தும். பாடங்கள் தொடர்பிலான விடயங்களை இரண்டாக வகைப்படுத்தலாம்.

✱ குறுகிய காலம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக்கூடிய விடயங்கள். (சூத்திரங்கள், ஆண்டுகள், புள்ளிவிபரங்கள், தரவுகள் என்பன)

✱ நீண்டகால ஞாபகத்திற்குரிய விடயங்கள். (பாடத்தின் அடிப்படைத் தத்துவங்கள், சித்தாந்தங்கள், கோட்பாடுகள் என்பன)

பரீட்சைக்கு மேற்கூறப்பட்ட இரண்டு விடயங்களும் அவசியமாகும். சிறந்த விடையினை எழுதும்போது இந்த இரண்டு விடயங்களை நினைவில் கொள்ளுதல் அவசியம். உதாரணமாக, இலங்கையின் சனத்தொகை என்ன? அதில் பெண்கள் சனத்தொகை எவ்வளவு? பிதுருதலாகலை மலையின் உயரம் எவ்வளவு? என்பனவற்றினை திட்டவட்டமாக அறிந்து கொள்ளல் அவசியம் என்று கூறிவிட முடியாது. அதாவது, அறிவு என்ற ரீதியில் குறுகிய கால நினைவுகள் அவசியம் இல்லை. ஆக, நீண்ட காலம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்களை நாம் ஒரே நாளில் கற்றுக்கொள்ள இயலாது. மாணவர்கள் வருடம் முழுவதும் பயிற்சிகளை மேற்கொண்டு விடயங்களை ஞாபகத்தில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். பயிற்சி என்று இங்கு கூறுவது ஒரு விடயத்தை மீட்டிப் பார்த்து பாடத்தில் உள்ள விடயங்களை ஞாபகப் படுத்திக் கொள்வதாகும்.

எனினும், பரீட்சை அண்மிக்கும்போது மட்டும் படிக்கும் பிள்ளைகளுக்கு இந்த நீண்ட கால ஞாபக முறையில் இருந்து பலன் பெற இயலாது. மனப்பாடம் செய்து பரீட்சைக்கு செல்வதை விட விளங்கிப் படித்து ஞாபகத்தில் வைத்திருந்து பரந்துபட்ட அறிவினைப் பெறுவதே சிறந்ததாகும். குறிப்பாக ஒரு சில பிள்ளைகள் கணக்குகளைப் பாடமாக்கி எழுதுவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பரீட்சையின் பின்னர் அது மறந்து விடுவது இயல்பாகும். எனினும், எதையும் முழு அளவிலான அறியப்பட்ட நிலை அதிக பலனைத் தரக்கூடியது என்பதை நாம் உணர வேண்டும்.

## நித்திரையும் நினைவாற்றலும்



நித்திரை நினைவாற்றலுக்கு எதிரி என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், நித்திரை கொள்வது நினைவாற்றலுக்கு சார்பானதாகும்.நல்ல நித்திரைக்குப் பின்னர் நினைவாற்றல் அதிகரிக்கின்றது. நித்திரை கொள்ளாமல் பாடங்களைப் படிக்கும் பிள்ளைகள் மூளைக்குத் தொந்தரவு கொடுக்கின்றனர் என்றே கூறவேண்டும். சிலர் உரிய நேரத்தில் தூங்காமல் கூடிய நேரம் விழித்திருந்து படிப்பது போன்று தோன்றினாலும் அவர்களுக்கு படித்தவற்றை நினைவில் இருத்திக் கொள்ளும் ஆற்றல் குறைவாகவே இருக்கும்.

நித்திரை கொள்ளாமல் படிக்கும் பிள்ளைகளுக்கு ஓய்வு தேவைப்படாத போதிலும் அவர்களில் நரம்பு மண்டலத்திற்கு ஓய்வு அத்தியாவசியமாகின்றது. கண்கள் திறந்திருந்தாலும் நரம்பு மண்டலம் ஓய்வில் இருக்கும். அதனால், படித்தவற்றை நினைவில் இருத்திக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. அத்துடன்,நரம்பு மண்டலம் ஓய்வில் இருக்கும் நிலையில் மனதின் தேவைக்காக கண்கள் திறந்திருப்பதனால் நரம்பு மண்டலத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடும். இந்தச் செயல் அடிக்கடி இடம்பெறுமாயின் மூளையின் நரம்பு மண்டலத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடும்.

குறுகிய கால நினைவாற்றல் விடயமொன்று நீண்டகால நினைவகத்திற்குச் சென்று பதிவாகும் செயற்பாடானது நித்திரையின்போதே, நடைபெறுகின்றது. பாடசாலையில் பெற்றுக்கொண்ட அறிவு, மேலதிகமாகப் பெற்றுக் கொண்ட அறிவு என்று நாளாந்தம் பெற்றுக்கொண்ட அறிவினை நித்திரையின்போதே மூளை நீண்டகால நினைவகத்தில் பதிவுசெய்து கொள்கின்றது.




## நினைவாற்றலும் போஷாக்கும்

சிறந்த நினைவாற்றலைக் கொண்டிருக்க சிறந்த போஷாக்கு அவசியமாகும். பரீட்சைக்காகப் படிக்கும்போது பிள்ளைகள் உணவில் அக்கறை காட்டமாட்டார்கள். சாப்பிடுவதற்கான நேரத்தினை படிக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணமும் படிக்க வேண்டும் என்ற மனஉளைச்சலினால் பசி ஏற்படாததுமே இதற்குக் காரணமாகும். இதனால், உங்களது நினைவாற்றலுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. போதிய போஷாக்கின்மையால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடையும். இதனால், அடிக்கடி நோய் வாய்ப்படவும் கூடும்.

நினைவாற்றலுக்கும் இரும்புச் சத்து, விற்றமின் சி ஆகியவற்றுக்கிடையிலும் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. விற்றமின் சி, க்ளுக்கோஸாக மாறி விரைவாக சக்தியைப் பெற்றுத்தரும். ஆகவே, பழங்களை உட்கொள்வது அவசியமாகும். வல்லாரை, கங்குன் கீரை, முருங்கைக் கீரை ஆகியவற்றில் இரும்புச் சத்து மிக அதிகமாக உள்ளது. நீர் அருந்துவதும் மிகவும் அவசியமாகும். இதனால், உடலின் ஈரலிப்புத் தன்மை பாதுகாக்கப்படுகின்றது.

## தொலைக்காட்சி பார்ப்பது நினைவாற்றலை பாதிக்குமா?

நம் அனைவரது கவனத்தை ஈர்க்கும் உபகரணமாக தொலைக்காட்சி உள்ளது. அதன் காட்சி, ஒலி-ஒளிகளின் வெளிப்பாடுகள் எமது கவனத்தினை ஈர்த்து எம்மை அவ்விடத்தை விட்டு நகரவிடாது. நேரத்தினை வீணடிப்பதனை மட்டுமன்றி மனதின் கவனத்தினைக் குழப்பும் தொலைக்காட்சிக்கு அடிமையாவது கல்வி கற்கும் மாணவ மாணவியருக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும். எனவே, பாடங்களைப் படிக்கும்போது வீட்டில் தொலைக்காட்சி இயக்குவதனை நிறுத்தி விடவேண்டும் அல்லது அவதானத்தை பெறும் இடத்தில் தொலைக்காட்சியை வைக்கவோ, பார்க்கவோ கூடாது. தொலைக்காட்சியில் பயன்மிக்க நிகழ்ச்சிகளைப் பார்க்கப் பழகிக் கொள்ளவேண்டும். செய்திகள், கல்வி நிகழ்ச்சிகள் என்பனவற்றினைப் பார்ப்பது அறிவு விருத்திக்கு உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐக்கிய நாடுகள் சபை



இரண்டாம் உலக மகா யுத்தம் பல்வேறு உயிர்களையும் உடைமைகளையும் அழித்தது. அவ்வாறானதொரு கொடிய யுத்தம் இனி மேலும் ஏற்படக்கூடாது என்னும் நோக்கில் ஜனநாயகவாதிகளான வின்சென்ட் சேர்ச்சில், ஜோசப் ஸ்டாலின், ரூஸ்வெல்ட் போன்றோரின் கருத்துக்களை ஏற்று 1945 ஆம் ஆண்டு சென்பிரான்சிஸ்கோ நகரில் கூட்டப்பட்ட மாநாட்டில் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது.

இச்சபையின் கொள்கைகளை ஏற்று ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், சீனா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் கையொப்பமிட்டன. இக்கொள்கைகளை ஏற்றுக் கொண்ட தினமாகிய 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதியே ஐக்கிய நாடுகள் சபை தினமாக அங்கீகரிக்கப்பட்டது.

இதன் முதலாவது செயலாளர் டிரிக்விலி ஆவார்.

ஐ.நா சபையானது, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அடிப்படை மனித தேவைகளை விருத்தி செய்து கொள்வதற்கும் சுயகௌரவத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளுக்கிடையில் நட்புறவை விருத்தி செய்து கொள்வதற்கும் அமைக்கப்பட்ட ஒரு தாபனமாகும்.

மேற்கூறிய பொதுக்குறிக்கோள்களை அடையும் பொருட்டு இச்சபை ஆறு உறுப்புகளைக் கொண்டுள்ளது. அவையாவன: பொதுச் சபை, பாதுகாப்புச்சபை, சமூக



பொருளாதார சபை, சர்வதேச நீதிமன்றம், நம்பிக்கை பொறுப்புச்சபை, செயலகம் ஆகியனவாகும்.

எந்த ஒரு நாடும் பொதுச்சபையின் சிபாரிசுக்கு இணங்க இச்சபையில் அங்கத்துவத்தைப் பெறமுடியும். இச்சபையின் தலைமையகம் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.

இதன் தற்போதைய செயலாளர் தென்கொரியாவை சேர்ந்த பேன் கீ மூன் ஆவார்.

த.நிஷாந்தினி,
நு/டயகம தெற்கு இல-2
த.ம.வித்.,
டயகம.

## படித்தால்...!

படி...! இதுவே
உன் வாழ்விற்கு
முதல் படி...!
நன்றாய் நீயும்
படித்திட்டால்....
உலகம் உன்னைப்
பாராட்டும்!
தவறி நீயும் நடந்திட்டால்
நாள் முழுவதும்
பழி சொல்லும்..!
நீயும் நன்றாய்
படிப்பதற்காய்
ஓடியாடிப்
பாடுபடு...!
பெற்றோர் உன்னால்
உயர நீ படி..!
படித்துப் பார் உனக்குப்
பட்டங்கள் பல சேரும்..!
பணமும் வந்து சேரும்...!
அதனால் நீயும் படி
நன்றாய் நீயும் படி...!

பி.பிரசாந்தன், தரம் - 9,
நு/நானுஓயா த.ம.வித்.,
நானுஓயா.

# சுவாமி விபுலாநந்த அடிகளார்



* சுவாமி விபுலாநந்தர் மீன்பாடும் தேன்னாடாம் மட்டக்களப்பில் காரைதீவு என்னும் ஊரில் 1892 ஆம் ஆண்டு பிறந்தார்.

* விபுலாநந்தரின் தந்தையார் பெயர் சாமித்தம்பி. தாயார் பெயர் கண்ணம்மையார். இவரது இயற் பெயர் மயில்வாகனன் ஆகும்.

* சுவாமி விபுலாநந்தர் தமிழ், ஆரியம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமையும் இலத்தீன், மலையாளம், சிங்களம் போன்றவற்றில் அறிவும் பெற்றிருந்தார்.

* விபுலாநந்தர் எழுதிய நூல்களில் யாழ்நூல், நாய்ச்சியார், நான்மணிக்கோவை என்பன சிறந்த பெயர்பெற்றவை.

* சிவானந்த வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

* தென் இந்தியாவில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் இலங்கை பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராக கடமையாற்றினார்.

* அடிகளார் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரை மஞ்சரிகளை எழுதியுள்ளார்.

* அடிகளார் மொழிபெயர்த்த நூல்கள் ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம், நம்மவர் நாட்டு வாழ்க்கை என்பனவாகும்.

* அடிகளார் தமிழ்தொண்டுகள் பல செய்துள்ளார்.

தொகுப்பு: எல்.நிஷாலி,
தரம் - 10A,
நு/எபற்ஸ்போட் த.வித்.,
நானுஓயா.




## இன்சொல்லின் இனிமை

**இனிய உவவாக இன்னாத கூறல்**
**கனி இருப்பக் காய் கவர்ந்தற்று**

என்கிறது திருக்குறள்.

இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றை விடுத்து இனிமையற்ற சொற்களைப் பேசுவது என்பது பழம் இருக்கக் காய்களை உண்பது போன்றதாகும். ஒரு மனிதனின் பழக்கவழக்கங்களை அவன் பேசும் சொற்களில் இருந்து தெரிந்து கொள்ளமுடியும். இதன் மூலம்தான் மனித நடைமுறையில் தீய கெட்ட வார்த்தைகளை கேட்க முடிகின்றது. கல்வியால் கீர்த்தி பெற்றவர்களின் வாயுரையைக் கேட்க நாடெங்கும் இருந்து மக்கள் திரண்டு வருவதுண்டு. ஆனால், தீமையான வார்த்தைகளை எவரேனும் பேசுவதைக் கேட்க யாரும் வருவதில்லை.

ஒருவருடைய வாய்ச்சொல் மூலம் செல்வம் உண்டாகும். வாய்ச்சொல் மூலம்தான் சிநேகிதமும் உறவுகளும் உண்டாகும்.

இன்சொல் பேசித்தான் எவருடனும் உறவாட வேண்டும். இதமான இன்சொல் மக்களை மாத்திரம் அல்ல, மாக்களையும் தன்பால் ஈர்க்கும் என்று முதியோர்கள் கூறுகின்றனர்.

ஆனால், சிலர் இதை உணருவதில்லை. சிறியோர் முதல் பெரியோர் வரை தீய வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர். அன்பான வார்த்தை பலருக்கு ஆதரவை அளிக்கும் நாம் எல்லோருடனும் அன்பாகப் பழகவேண்டும்.

மு.சாந்தீஸ்வரி, தரம் - 10, நு/எபற்ஸ்போட் த.வித்.,

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:....................................
முகவரி:....................................
....................................
பாடசாலை:....................................
வகுப்பு:....................................
திகதி: ....................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 2295

ரொஸ்கான் ஆசிப்,
தரம் - $6^{A}$,
எருக்கலம்பிட்டி மு.ம.வித்.,
புத்தளம்.


அங்.இல : 2296

ஏ.எஃப்.சஜிதா,
தரம் - $8^{A}$,
முஸ்லிம் மகளிர் வித்.,
சம்மாந்துறை.


அங்.இல : 2297

மார்க் கிறிஷோன்,
தரம் - $6^{D}$,
புனித மிக்கேல் கல்.,
மட்டக்களப்பு.


அங்.இல : 2298

ஜெ.சிந்துஷா,
தரம் - $13^{A}$,
விபுலானந்தா கல்.,
வவுனியா.


அங்.இல : 2299

க.விமல்ராஜ்,
தரம் - $10^{A}$,
கனகபுரம் ம.வித்.,
கிளிநொச்சி.


அங்.இல : 2300

க.கஜேந்தினி,
தரம் - 10,
வேம்படி மகளிர் உ.பா.,
யாழ்ப்பாணம்.


அங்.இல : 2301

எம்.வி.எம்.ராஸித்,
தரம் - $6^{B}$,
பதுரியா ம.கல்.,
கேகாலை.


அங்.இல : 2302

ஏ.ஆர்.எம்.றிபாஸ்,
தரம் - 13(கலை),
குறிஞ்சாக்கேணி அறபா
ம.வித்., திருகோணமலை.


அங்.இல : 2303

த.சிந்துஜா,
தரம் - $8^{B}$,
முல்லைத்தீவு ம.வித்.
முல்லைத்தீவு.


அங்.இல : 2304

எம்.எச்.எஃப்.ஷிஹானா,
தரம் - 12(வர்த்தகம்),
பறகஹதெனிய தே.பாட.,
பறகஹதெனிய.


அங்.இல : 2305

சித்தாரா கலீல்,
தரம் - 11,
மின்ஹாஜ் மு.வித்.,
ஹொறம்பாவ.


அங்.இல : 2306

ஆஸாட் பரீட்,
தரம் - 11,
வள்பாளுவ மு.ம.வித்.,
வள்பாளுவ.



திருகோணமலை, உவர்மலையைச் சேர்ந்த போல் பிரகாஷ்-சில்வியா தம்பதியரின் புதல்வி பிரவினா, தனது பத்தாவது பிறந்தநாளை 11.12.2008 அன்று தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை அன்பு டடா, மம்மி மற்றும் தம்பி கிஷோ ஆகியோர் குழந்தை யேசுவின் அருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு




காரைதீவில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இலவசமாக கல்வியைப் போதிக்குமுகமாக ஆரம்பிக்கப்பட்ட EDS இலவசக் கல்வியகத்தில் கற்கும் மாணவர்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் படத்தில் காண்கிறீர்கள்.

*(தகவல் - மு.ஜெ.ஜெகரூபன், காரைதீவு-10)*



## ஷ்... உங்களுக்கு மட்டும்!

★ ஒருவர் இறக்கும்போது கடைசியாக கட்புலனை [கேட்கும் உணர்வை] இழக்கிறார். இதுதான் இறப்பின் கடைசி நிலை.

★ உலகில் தங்கத்தை விட விலைகூடிய மூலிகை ஒன்று உள்ளது. இதன் பெயர் 'கின்ஸெங்' (Ginseng) என்பதாகும். அரிதாகவும் மெதுவாகவும் வளரக்கூடிய இம்மூலிகைச் செடி தென் கொரியா, ஜப்பான் நாடுகளில் அரிதாக வளர்கின்றது. இருதயம் தொடர்பான நோய்களுக்கு இதிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகின்றது.




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.வை.எஃப்.ஸஹ்லா,
தரம் - $8^{B}$,
அளுத்கம் வீதிய
மு.ம.தே.பாட.,
தர்கா நகர்.



எம்.ஆர்.எஃப்.நப்லியா,
தரம் - $5^{B}$,
கழுகமுவ மத்திய கல்.,
கெலிஓய.



பாத்திமா ஆயிஷா, தரம் - 7,
ஸாஹிரா கல்லூரி,
கம்பளை.



எஃப்.ரிஸ்லா, தரம் - 11,
அல்-கமர் ம.கல்.,
பம்மன்ன.



எம்.ஜே.எஃப்.ஹஸ்னா,
தரம் - $7^{A}$,
அல்-இர்பான் ம.கல்.,
பந்தாவ.



ஞா.ஸ்ரீநாத் புருடி,
தரம் - $11^{B}$,
இந்துக் கல்லூரி,
இறம்பொடை.



எம்.என்.முஹம்மத்,
தரம் - $8^{C}$,
ஹமீத் அல்-ஹுசைனி
தே.கல்., கொழும்பு.



எம்.மயூரேஸ்,
தரம் - $6^{A}$,
இந்து தேசிய கல்.,
புசல்லாவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம் 170



## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் கமலாவுக்கும் மாலாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

මාලා: ආයුබෝවන් කමලා.
ஆயுபோவன் கமலா.
மாலா: வணக்கம் கமலா.



කමලා: ආයුබෝවන් මාලා.
ஆயுபோவன் மாலா.
கமலா: வணக்கம் மாலா.

මාලා: මම ඊයේ නුවර ගියා.
மம ஈயே நுவர கியா.
மாலா: நான் நேற்று கண்டிக்குப் போனேன்.

කමලා: කොහොමද ගියේ, බස් එකේද, කාර් එකේද?
கொஹொமத கியே, பஸ் எகேத? கார் எகேத?
கமலா: எப்படிப் போனீங்க, பஸ்ஸிலா? காரிலா?

මාලා: බස් එකේ. මට ඔයාගේ යහළුවෙක් හමුවුණා.
பஸ் எகே. மட ஒயாகே யஹளுவெக் ஹமுவுனா.
மாலா: பஸ்ஸில் போனேன். நான் உங்கள் நண்பரொருவரைச் சந்தித்தேன்.

කමලා: කවුද යාළුවා නම දන්නවාද?
கவுத யாளுவா, நம தன்னவாத?
கமலா: நண்பர் யார், பெயர் தெரியுமா?



මාලා: ඔව් දන්නවා. නම නලිනි.
ஒவ் தன்னவா. நம நளினி.
மாலா: ஆம் தெரியும். பெயர் நளினி.

කමලා: නලිනි මගේ හොඳ යහළුවෙක්.
நளினி மகே ஹொந்த யஹளுவெக்.
கமலா: நளினி என்னுடைய நல்ல நண்பி.

මමයි නලිනියි විශ්වවිද්‍යාලයේ එකට ඉගෙන ගත්තේ.
மமய் நளினிய் விஷ்வவித்யாலயே எகட இகென கத்தே.
நானும் நளினியும் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தோம்.

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: நான் நேற்று கண்டிக்குப் போனேன்.
මම ඊයේ නුවර ගියා.

i. நான் பஸ்ஸில் போனேன்.
..........................................................................
ii. நான் காரில் போனேன்.
..........................................................................
iii. நளினி என்னுடைய நல்ல நண்பி.
..........................................................................
iv. நாங்கள் ஒன்றாகப் படித்தோம்.
..........................................................................






**'Is'** எனும் துணை வினைச்சொல்லை (Auxiliary Verb) ஒரு வாக்கியத்தில், தனியொரு வினைச்சொல்லாக கையாண்டு அமைக்கப்பட்ட மேலும் சில வாக்கியங்களை இங்கே பயில்வோம்.

(அ) Ranjith is in the shop.
ரஞ்ஜித் கடையில் இருக்கின்றான். (ஆண்பால்)

(ஆ) Lalitha is in school.
லலிதா பாடசாலையில் இருக்கின்றாள். (பெண்பால்)

(இ) The crow is on the roof.
அந்தக் காகம் கூரையின் மேல் உள்ளது.

---

✱ 'is' எனும் துணை வினைச்சொல் இரண்டாவது நிலையில் பின்வருமாறு அர்த்தம் கொள்ளப்படுகின்றது.

(அ) Ranjith is a tailor.
ரஞ்ஜித் ஒரு தையல்காரன் ஆவான். (ஆண்பால்)

(ஆ) Lalitha is a teacher.
லலிதா ஒரு ஆசிரியை ஆவாள். (பெண்பால்)

(இ) Crow is a bird.
காகம் ஒரு பறவை ஆகும். (ஒன்றன்பால்)

✱ 'is' எனும் துணை வினைச்சொல் (Auxiliary Verb) சகிதம், நிகழ்கால எச்சவினைச்சொல் (Present participle) கையாளப்பட்டு அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) Ranjith is swimming.
ரஞ்ஜித் நீந்திக்கொண்டு இருக்கின்றான். (ஆண்பால்)

(ஆ) Ranjith is swimming in the river.
ரஞ்ஜித் ஆற்றில் நீந்திக்கொண்டு இருக்கின்றான்.

(அ) Lalitha is washing.
லலிதா கழுவிக்கொண்டு இருக்கின்றாள். (பெண்பால்)

(ஆ) Lalitha is washing her face.
லலிதா தனது முகத்தைக் கழுவிக்கொண்டு இருக்கின்றாள்.

(அ) A crow is flying.
ஒரு காகம் பறந்துகொண்டு இருக்கின்றது. (ஒன்றன்பால்)

(ஆ) A crow is flying in the sky.
ஒரு காகம் வானத்தில் பறந்துகொண்டு இருக்கின்றது.

---

(அ) My brother is.
எனது சகோதரன் இருக்கின்றான். (ஆண்பால்)

(ஆ) My brother is in the office.
எனது சகோதரன் அலுவலகத்தில் இருக்கின்றான்.

(அ) My sister is.
எனது சகோதரி இருக்கின்றாள். (பெண்பால்)

(ஆ) My sister is at home.
எனது சகோதரி வீட்டில் இருக்கின்றாள்.

(அ) My book is.
எனது புத்தகம் இருக்கின்றது. (ஒன்றன்பால்)

(ஆ) My book is on the table.
எனது புத்தகம் மேசையின் மேல் இருக்கின்றது.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்லஸ்




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.



# புவி மாசுபடுதலை தடுக்க இணக்கம்



புவி வெப்பமடைதலைத் தவிர்க்கும் பொருட்டு கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் தொடர்பான உடன்படிக்கையொன்றில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர். மேலும், புவியில் வெளிப்படுகின்ற 'காபனை' 2020 ஆம் ஆண்டை அடைகையில் கணிசமான அளவில் குறைப்பதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அடங்குகின்ற 27 நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை நாடாக விளங்குகின்ற பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோஸியின் தலைமையிலேயே இந்த மாநாடு நடைபெற்றது. 2020 ஆம் ஆண்டுக்குள் 'காபன்' வெளியேற்றங்களை கணிசமான அளவில் குறைத்தால் மாத்திரமே புவியில் காலநிலை மாற்றத்தால் ஏற்படுகின்ற ஆபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளதன் அடிப்படையில் மேற்படி மாநாடு கூடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்காவில் பனிப் புயல்

அமெரிக்காவில் வீசிய பாரிய பனிப்புயலினால் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன் லட்சக்கணக்கிலான மக்கள் மின்சாரமின்மையால் பெரும் அவஸ்தைக்கு ஆளாகியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


அமெரிக்காவின் வட கிழக்குப் பகுதிகளிலேயே இந்தப் பாரிய பனிப்புயல் ஏற்பட்டது. குறிப்பாக நியூஹம்ஷெயர், நியூயோர்க், மெயின்னே, மசாஸுசெட்ஸ் ஆகிய மாநிலங்களில் இதன் தாக்கம் அதிகமாக இருந்தமையால் அம்மாநிலங்களில் அவசரகால நிலையும் அமுல்படுத்தப்பட்டது.


## ஈராக்கிலுள்ள பிரிட்டன் படைகளை மீளப்பெறல்

ஈராக்கில் நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ் படையினரை எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து மீள அழைத்துக் கொள்வதற்கு உத்தேசித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

2003 ஆம் ஆண்டின்போது ஈராக் ஜனாதிபதியாக இருந்த சதாம் ஹுசேனின் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் பொருட்டு அமெரிக்காவின் தலைமையில் உலக நாடுகள் பல தமது படைகளை ஈராக்கிற்கு அனுப்பியிருந்தன. அதன்படி பிரிட்டனில் இருந்து 4,000 இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





இந்நிலையில் ஈராக்கில் ஜனவரி மாதம் மாகாணத் தேர்தல்கள் நடைபெறவுள்ளமையினால் அத்தேர்தல்கள் அமைதியாக நடைபெற்றால் மார்ச் மாதத்திலிருந்து பிரிட்டன் படைகள் ஈராக்கிலிருந்து மீள அழைக்கப்படும் என்றும் ஜூன் மாதத்தை அடைகையில் படைகள் முழுமையாக மீள வரவழைக்கப்பட்டுவிடும் என்றும் தெரியவருகின்றது.

## தாய்லாந்தில் புதிய பிரதமர் தெரிவு

**தாய்லாந்தில் புதிய பிரதமராக அபிசித் விக்ஜிவா தெரிவாகியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இவர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின் மூலமே பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**



**முன்னதாகப் பிரதமராக இருந்த சொம்சாய் வொங்ஸாவை பதவி விலகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதன் பேரில் அவர் பதவி விலகியதையடுத்தே, மேற்படி வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்டது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் வெற்றி பெற்று பிரதமராகத் தெரிவாகியுள்ளார்.**

**1992 ஆம் ஆண்டிலேயே இவர் முதன்முதலாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருந்தார். அதனைத் தொடர்ந்து 2005 ஆம் ஆண்டிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இவர் வகித்து வந்துள்ளார்.**

**இதேவேளை, பதவி விலகிய அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் தோல்வியை ஏற்றுக்கொள்ள மறுத்து ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர்.**

## அற்லஸ் கேள்வி - 183

**கேள்வி:** ஐரோப்பிய ஒன்றியத்தில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 183,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 181 இன் சரியான விடை: 2010 ஆம் ஆண்டு**

பரிசு பெறுவோர்

எஃப்.நஸ்ரினா,
66A1/3, சென் செபஸ்தியன் வீதி, கொழும்பு-12.

லக்ஷ்மனராஜ் அருண்பிரசாந்த்,
35/33B, செய்லாகல வீதி,
நாவலப்பிட்டி.

ஆர்.ரொஷான்,
30A, நாகவில்லு, பாலாவி, புத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பைலா கபிரிஞ்ஞா பாடல்கள் நீண்ட கால வரலாற்றினைக் கொண்டவை அல்ல. எளிய பொழுதுபோக்கு அம்சமாக விளங்கும் 'பைலா கபிரிஞ்ஞா' பாடல்கள் இலங்கையின் கரையோரப்பகுதிகளில் அதிக பிரசித்தத்தைப் பெற்றுள்ளன. அந்நிய ஆக்கிரமிப்பின் ஆரம்பம் இலங்கையின் கரையோரத்தை அண்டி ஆரம்பிக்கப்பட்டமையும் அவர்களால் இந்த இசை வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டமையுமே இதற்கு முக்கிய காரணமாகும். இதனைத் தொடர்ந்து இலங்கையில் இந்த பைலாப் பாடல்கள் முக்கிய இடத்தைப் பெறத் தொடங்கியன.**

# போர்த்துக்கேயர் அறிமுகப்படுத்திய பைலா கபிரிஞ்ஞா



'பைலா' என்பது எளிய ரசனையுடனான பாடல் கலையாகும். 'பைலா' என்ற வார்த்தையுடன் இணைந்ததாகவே கபிரிஞ்ஞாவும் விளங்குகின்றது. பைலா கபிரிஞ்ஞா வகைப் பாடல்கள் குறித்து சமூகத்திலுள்ள எதிர்ப்பு நிலைகளினால் அவற்றிற்கு எமது நாட்டில் கூடிய அங்கீகாரம் வழங்கப்படவில்லையாயினும் சில பைலாப் பாடல்கள் சமூக அநீதிகள், உரிமைகள், முக்கிய நிகழ்வுகளைக் கருவாகக் கொண்டு இசைக்கப்படுகின்றன.

## பைலா கபிரிஞ்ஞா பாடல்கள்

'பைலா' என்ற சொல் போர்த்துக்கேய மொழியிலிருந்து மருவி வந்த சொல்லாகக் கருதப்படுகின்றது. சர்வதேச அகராதிகளில் 'பைலா' என்ற சொல்லுக்கு 'நடனம்' என்றே அர்த்தம் வழங்கப்படுகின்றது. போர்த்துக்கேய மொழியில் பைலா என்ற சொல் பைலோ (Bailo) என்றும் ஸ்பானிய மொழியில் பலார் (Balar) என்றும் லத்தீன் மொழியில் பைலாரே (Bailare) என்றும் குறிப்பிடப்படுகின்றது.

பைலா கபிரிஞ்ஞா என்பது ஒரே பாடல் வகை என்று இசைக்கலைஞர்கள் தெரிவிக்கின்றனர். பைலா என்று கூறப்படும் பாடலைப் பாடும்பொழுது ஆடப்படும் நடனத்தையே 'கபிரிஞ்ஞா' என்று கூறுவதாக சில முன்னாள் பைலாக் கலைஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எமது நாட்டு பைலாப் பாடகர் சி.எம்.பேர்னாந்துவினால் எழுதப்பட்ட "The Music of Ceylon' என்ற நூலில் போர்த்துக்கேயர், காப்பிரி மற்றும் சிங்களம் ஆகிய மூன்று இன மக்களால் கூட்டாக ஏற்படுத்தப்பட்ட பாடல் முறையே 'கபிரிஞ்ஞா' என்று கூறப்படுகின்றது.

## இலங்கையில் பைலா கபிரிஞ்ஞா

இலங்கையில் 'பைலா கபிரிஞ்ஞா' பாடல்கள் உருவான விதம் குறித்து பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பாதணிகள், ஆடைகள் தைத்த மற்றும் தொழிற்சாலைகளில் பணியாற்றிய போர்த்துக்கேயர்களிடம் இருந்தே இலங்கையில் பைலா கபிரிஞ்ஞா பாடல்கள் பிரசித்தி பெற்றிருக்கலாம் என்று கருத்துக் கூறப்படுகின்றது. அவர்களை 'மெக்கானிக்கர்கள்' என்று பொதுவாக அழைப்பர்.

இலங்கையில் வசித்த ஆபிரிக்க இனத்தவர்களான 'காப்பிரி' மக்களினால் பைலா கபிரிஞ்ஞா பாடல்கள் உருவானதாகவும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், போர்த்துக்கேய மெக்கானிக்கர்களுடன் திருமண உறவில் இணைந்த இலங்கையர்களும் இந்தப் பாடல் உருவாக்கத்திற்கு முக்கிய பங்களிப்புச் செய்தனர் என்றும் கூறப்படுகின்றது.

## பைலா கபிரிஞ்ஞா படைப்பாளிகள்

இலங்கையில் 'காப்பிரி' மக்களின் வழித்தோன்றல்கள் ஆனமடுவ, புத்தளம் பகுதிகளில் வசித்து வருகின்றனர். மிகவும் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்க விரும்பும் இவர்கள் விழாக்களின் போது போர்த்துக்கேய மொழியில் பைலா கபிரிஞ்ஞா பாடல்களைப் பாடி, ஆடும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர். தற்போதும் அவர்களிடம் பழைய போர்த்துக்கேய பைலா கபிரிஞ்ஞா பாடல்கள் உள்ளன.

இவர்களின் இன்னுமொரு வழித்தோன்றல்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்கின்றனர். அவர்களை 'பேர்கர்' என்று அழைக்கின்றோம். பைலா கபிரிஞ்ஞா பாடல்கள் தமது கலாசாரத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய அம்சங்கள் என்று அவர்கள் கூறுகின்றனர். பைலா கபிரிஞ்ஞா பாடல்களைப் பாடிக் கொண்டு ஆடும் லேன்சர் (Lancer) எனும் பிரபல நடனக்கலையும் பேர்கர்கள் மத்தியில் பிரசித்தமாக உள்ளது.

## விவாத பைலா

பைலா கபிரிஞ்ஞாவின் மற்றுமொரு வடிவமே விவாத பைலாவாகும். கண்காட்சிகள் மற்றும் விழாக்களில் விவாத பைலாக்களுக்கு நல்ல வரவேற்புள்ளது. இந்தப் போட்டிகளில் பலதரப்பட்ட பிரதேசங்களில் இருந்தும் கலைஞர்கள் வருகை தந்து விவாத பைலாக்களில் போட்டியிடுவர். இங்கு சிறந்த பைலாக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசுகளும் வழங்கப்படும். 1960 களில் இலங்கை வானொலியிலும் விவாத பைலா ஒலிபரப்பாகியது.

## பைலா கபிரிஞ்ஞா இசை


எளிமையான இசைநயத்தைக் கொண்டதாக பைலா கபிரிஞ்ஞா இசை விளங்கியது. இந்த இசைக்கேற்ப பாடுவது இலகுவாக இருக்கும். பைலா கபிரிஞ்ஞா இசையில் பதினெட்டுத் தாளங்கள் இருப்பதாக பழைய பைலாக் கலைஞர்கள் தெரிவிக்கின்றனர். போர்த்துக்கேய நாட்டில் உருவான பைலா கபிரிஞ்ஞா பாடல்களுக்கு ஸ்பானிய இசையே பயன்படுத்தப்பட்டது.

## இசைக் கருவிகள்

வயலின், கிட்டார், ரபான், மென்டலின் என்பன முன்னர் பைலா இசைக்கும் போது பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகளாகும். தற்போது மேலைத்தேய இசையே பயன்படுத்தப்படுகின்றது. அதற்காக ஒகன், இலத்திரனியல் கிட்டார், ட்ரம்பட்,செக்ஸோபோன், டெமரின், டிரம் செட் ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கை உட்பட போர்த்துக்கல், ஸ்பெயின், பிரேசில், அரேபியா, ஆபிரிக்கா, இத்தாலி, மெக்சிக்கோ ஆகிய நாடுகளில் பைலா கபிரிஞ்ஞா பாடல்கள் பிரபல்யமாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாரை தேர்வு செய்யலாம்!

சந்தனபுரி மன்னர் சாம்பனுக்கு படகுச் சவாரி என்றால் மிகவும் பிடிக்கும். அவர் ஓய்வு நேரங்களில் அரண்மனைக்கு அருகிலிருக்கும் பெரிய ஏரியில் படகை விட்டு மகிழ்வார். அவரிடம் நீண்ட நாட்களாக இருந்த படகோட்டி திடீரென்று இறந்துவிட்டார். ஆகவே, அவருக்குப் பதில் வேறு ஒரு திறமையான படகோட்டியை நியமிக்க முடிவுசெய்தார். தலைமை அமைச்சர் விமலாதித்தனிடம் திறமையான ஒரு படகோட்டியை தேர்ந்தெடுக்கும் பணியை ஒப்படைத்தார். அவர் பல படகோட்டிகளுக்கிடையே தேர்வு வைத்து விமலன், திரவியம் என்ற இரண்டு படகோட்டிகளைத் தேர்வு செய்தார்.

ஒருநாள் அவர்கள் இருவரையும் மன்னரிடம் அழைத்துச் சென்றார் அமைச்சர். "மன்னா... விமலன் திறமையாகப் படகு ஓட்டுவதோடு, நன்றாக நீந்தவும் செய்வான். திரவியமும் படகு ஓட்டுவதில் நிபுணன் தான் என்றாலும் இவனுக்கு சரி வர நீந்தத் தெரியாது. திறமையாகப் படகு ஓட்டுவதை மட்டுமே கருத்தில் கொண்டு இவர்கள் இருவரையுமே தேர்ந்தெடுத்தேன். இவர்கள் இருவரில் யாரைத் தங்களுக்குப் பிடிக்கிறதோ அவரை தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்" என்று கூறினார் அமைச்சர் விமலாதித்தன்.

"அமைச்சரே! நான் திரவியத்தை அரசுப் படகோட்டியாகத் தேர்ந்தெடுத்துள்ளேன். நாளை அவனை மட்டும் வேலையில் சேர்த்துவிடுங்கள்" என்றார் மன்னர். அதைக்கேட்டு ஆச்சரியப்பட்ட அமைச்சர், "அரசே! தாங்கள் திரவியத்தையா படகோட்டியாக தேர்ந்தெடுத்துள்ளீர்கள்? அவன் நன்றாக படகு ஓட்டுவானே தவிர சரியாக நீந்த வராது. ஆனால், விமலன் படகு ஓட்டுவதிலும் நீந்துவதிலும் பெரிய திறமைசாலி. அதை விட்டு விட்டு தாங்கள் திரவியத்தை தேர்ந்தெடுத்ததில் ஏதோ மர்மம் உள்ளது. அது என்ன என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டார்.

மன்னர் மெல்லப் புன்னகைத்தபடி "அமைச்சரே! விமலனுக்கு நன்றாக நீந்தத் தெரியும் என்பதால் அவன் மிகவும் அலட்சியத்துடன் படகை ஓட்டுவான். படகு திடீரென்று ஏரியில் கவிழ்ந்தாலும் அவனுக்குக் கவலை இல்லை. நீந்திக் கரை சேர்ந்து விடுவான். அப்படிப்பட்டவனது படகில் நீந்தத் தெரியாதவர் யாரேனும் சென்றால் அவரது கதி என்னாவது?"

திரவியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு சரியாக நீந்தத் தெரியாது. அதனால், படகு ஓட்டுவதில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பான். படகு கவிழ்ந்து விட்டால் அவனது உயிரும் அல்லவா போய்விடும். ஆகவே, படகு ஓட்டுவதில் அவன் மிகவும் எச்சரிக்கையுடனேயே இருப்பான். அவனை நம்பி தைரியமாகப் படகில் சவாரி செய்யலாம். அதனால்தான் திரவியத்தை படகோட்டியாகத் தேர்ந்தெடுத்தேன்" என்றார். அதைக் கேட்ட அமைச்சர், மன்னரின் புத்தி சாதுரியத்தைக் கண்டு மிகவும் வியந்தார்.

எந்த விஷயத்தையும் நன்கு யோசித்துப் பார்த்து முடிவு எடுக்கவேண்டும்.




# காவல்காரரிடம் கண்ட பேய்க்கோளாறு



போர்த்தி இருந்த போர்வையை யார் இழுக்கிறார்கள் என்று பார்த்தவனுக்கு அங்கு நின்ற உருவத்தைக் கண்டதும் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. அங்கே நின்றுகொண்டு இருந்தவர் காவல்காரர்தான். இவர் ஏன் இங்கு வந்தாரோ என்று அவன் பயந்தபடி இருக்கையில் அவர் அவன் கைகளைப் பிடித்து இழுத்து எழும்பச் செய்து அவனை அங்கு அமரச் செய்தார். அவருடைய செய்கை விமலுக்கு அதிர்ச்சியாகவும் அவனை மேலும் பயமுறுத்துவதாகவும் இருந்தது.

இவர் தன்னை என்ன செய்யப் போகிறாரோ என்று அவன் பயந்தாலும் அவரைக் கண்டு பயப்படாமல் இருப்பது போல் காட்ட கஷ்டப்பட்டு புன்னகையை வரவழைத்தான். ஆனாலும், அவர் அதனைக் கணக்கெடுக்காமல் அவனுக்கு அருகில் வந்து அமர்ந்து கொண்டார். பின்னர் அவனை ஏளனமாக நோக்கியபடி..... "என்ன தம்பி நான் அவ்வளவு சொல்லியும் இப்படிப் பயந்து நடுங்குகிறீர்களே? உங்களுக்கு வெட்கமாக இல்லையா?" என்று கேட்டார்.

"பயந்தேனா..? நானா?" என்று அவன் எதுவும் புரியாதது போல் கேட்டான்.

"பிறகு இல்லையா? நான்தான் உங்களைக் கண்டேனே. முதலில் நான் இங்கு வந்தபோதும் தூங்குவது போல் பாசாங்கு செய்தீர்கள். இப்பொழுதும் அப்படிப் பாசாங்கு செய்தீர்கள். நீங்கள் இரண்டு முறை அங்கு வந்ததை நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். பதினைந்து வருடகாலமாகக் காவல் வேலை செய்கிறேன். என் கண்களில் மண்ணைத் தூவ நினைக்கிறீர்களே?"

காவல்காரர் இப்படிப் பலவாறு கூறியதும் அவனுக்கு பயத்துடன் அவமானமாகவும் இருந்தது. இவருக்கு என்னைப் பற்றி எல்லாம் தெரிந்திருக்கிறது. இவரிடம் எதையும் மறைக்க முடியாது போல் இருக்கிறது என்று நினைத்தவன் பரிதாபமாக அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"ஏன் தம்பி... இப்படிப் பயந்து நடுங்குகிறீர்கள்? உங்களுக்கு என்ன நடந்தது. உங்களைப் பார்த்தால் என் பிள்ளை போல் இருக்கிறது. அதனால் தான் கேட்கிறேன். சொல்லுங்கள்"

அவர் சொல்வதைக் கேட்டதும் அவனுக்கு சிறிது தைரியம் ஏற்படுவது போல் இருந்தது. "இவரிடம் எல்லா உண்மைகளையும் சொல்லி விடலாமா? அதாவது ஏன் பயந்தேன் என்ற" விஷயத்தை என்று நினைத்தவன் மெதுவாக அவருடன் பேசலானான்.

"வந்து.... ஐயா.. இங்கு பேய் நடமாட்டம் இருப்பது" என்று இழுத்தான்.

"என்ன அப்படியா? அப்படியானால் எனக்கும் காட்டவேண்டியதுதானே. நானும் அந்தப் பேய்களைப் பார்த்தது போல் இருக்கும்"

காவல்காரரின் இந்தப் பதில் அவனுக்கு மேலும் பயத்தை ஏற்படுத்துவது போல் இருந்தது. இவர் ஜோக்காகப் பேசுகிறாரா அல்லது வேறு ஏதும் பேய்க்கோளாறு காரணமாக.... அப்படிப் பேசுகிறாரா? இவரிடம் போய் எப்படி தான் கண்ட விஷயங்களைக் கேட்பது என்று அவன் சிந்தித்துக் கொண்டு இருக்கையில் அவர் அவனிடம் மேலும் மேலும் கேட்டார்.

"என்ன தம்பி, நான் கேட்கிறேன். நீங்கள் பேசாமல் இருக்கிறீர்கள்? பேயை எங்கு கண்டீர்கள்? அது எப்படி இருந்தது?"

காவல்காரரின் முகம் கோபத்தால் மாற்றமடைவதைப் பார்க்கையில் விமலின் மனதில் ஓர் இனம்புரியாத பயம் ஏற்பட்டு அவனைப் பயமுறுத்துவது போல் இருந்தது

அவனுக்குப் பதில் சொல்லப் பயமாக இருந்தது. அந்தப் பெண்ணுடனும் கரிய உருவம் இருந்த இடத்திலும் அவர் நின்றுகொண்டு இருந்ததைக் கண்டதாலேயே அதுபற்றிக் கேட்க அவனுக்குப் பயமாக இருந்தது.

மேலும் மேலும் கேட்டுக் கொண்டு இருந்த அவரின் முகம் கோபத்தால் மாற்றமடைவது போல் இருந்தது. அந்த முகத்தைப் பார்க்கையில் விமலுக்கு ஓர் இனம்புரியாத பயம் ஏற்பட்டது. அச்சத்துடன் அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தான்.

அப்பொழுது அவர் சொன்னார், "தம்பி உங்களோடு பேசும்போது எனக்குத்தான் பேய் ஏறுகிறது. நீங்கள்தான் எனக்கும் பேய் ஏற்றிக்கொண்டு இருக்கிறீர்கள்"

இவர் என்ன சொல்கிறார். அப்படியானால் இவருக்கு பேய்க்கோளாறு ஏற்படுகிறதா?

விமலின் உடல் நடுங்கத் தொடங்கியது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய ஐவகை விளையாட்டு



உலகில் பல்வேறு விதமான விளையாட்டுப் போட்டிகள் உருவாகிக் கொண்டிருக்கும் அதேவேளை, மனிதனின் அன்றாட நடவடிக்கைகளான ஓடுதல், பாய்தல், ஆகியன போன்றே யுத்தமும் முக்கியவோர் அம்சமாகிவிட்டது. அவ்வகையான ஒரு விளையாட்டுப் போட்டிதான் பண்டைய கால ஐவகை விளையாட்டுப் போட்டியாகும். இந்த பண்டைய கால ஐவகை விளையாட்டுப் போட்டியானது தனித்தனியான விளையாட்டுப் போட்டிகளல்ல. பல விளையாட்டுப் போட்டிகளின் இணைவுதான் இந்த ஐவகை விளையாட்டுப் போட்டியாகும்.

பண்டைய ஐவகை விளையாட்டுப் போட்டிகள் கி.மு 708 இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளிலேயே முதன்முதலாக இடம் பெற்றதாக கூறப்படுகின்றன. அந்நாட்களில் இந்த பண்டைய ஐவகைப் போட்டிகளில் ஓடுதல், பாய்தல், ஈட்டி எறிதல், பரிதி எறிதல் மற்றும் மல்யுத்தம் ஆகிய போட்டிகளே இடம்பெற்றிருந்தன. பண்டைய ஒலிம்பிக் போட்டிகளில் உண்மையான வீரராக கருதப்படுபவர் ஐவகைப் போட்டிகளின் வெற்றியாளரேயாவார்.

## ஆரம்ப கர்த்தாக்கள்



பண்டைய ஒலிம்பிக் போட்டிகளில் ஐவகைப் போட்டிகளை இடம்பெறச் செய்வதில் அதன் ஆரம்பகர்த்தாக்களான பியரே பெரன் மற்றும் குபர்டின் அவர்களும் மிகுந்த ஆர்வம் செலுத்தியிருந்தனர். விளையாட்டு வீரனின் உண்மையான பலத்தையும் வீரத்தையும் உரசிப்பார்க்கும் விளையாட்டுப் போட்டியாக இப்போட்டியை அடையாளப்படுத்திய குபர்டின் அவர்கள் பண்டைய விளையாட்டுக்கள் மட்டுமன்றி வேறுசில புதிய விளையாட்டுக்களையும் சேர்த்தே பண்டைய ஐவகை விளையாட்டுப் போட்டிகளை, உருவாக்கினார். இதன் முக்கிய கருப்பொருளாக அமைந்தது என்னவென்றால் யுத்த காலத்தில் எதிரியினால் சிறைப்படுத்தப்படும் வீரன் ஒருவன் அவர்களிடமிருந்து சமயோசிதமாகத் தப்பித்து வருவதற்கான பக்குவத்தை உணர்த்துவதேயாகும்.

துப்பாக்கி சுடுதல், வாள்சண்டை, நீச்சல், குதிரைச் சவாரி மற்றும் நாட்டின் குறுக்காக ஓடுதல் ஆகிய ஐந்து வகைப் போட்டிகளை உள்ளடக்கியதாகவே ஐவகை விளையாட்டுப் போட்டி உருவாக்கப்பட்டது.

இந்த ஒவ்வொரு போட்டிகளிலும் வீரர்கள் காட்டுகின்ற திறமைகளின் அடிப்படையில் அவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். முதல் நான்கு போட்டிகளிலும் பெறப்படுகின்ற புள்ளிகளின் மொத்த எண்ணிக்கையும் செக்கன் கணக்கிற்கு மாற்றீடு செய்யப்பட்டு அதில் கிடைக்கப்பெறுகின்ற முடிவுகளுக்கமைய அவ்வவ் போட்டியாளர்கள் ஐந்தாம் போட்டியான ஓட்டப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வரிசைப் படுத்தப்படுவர்.

எனவே, இந்த ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டுபவரே ஒட்டுமொத்தமாக ஐவகைப் போட்டிகளில் வெற்றி பெற்றவராக கருதப்படுவார். பண்டைய ஐவகை போட்டிகளானது முதன்முதலாக 1912 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டப்போட்டி



மூவாயிரம் மீற்றர் தூரம் கொண்ட வீதியில் போட்டியாளர்கள் ஓட வேண்டியிருக்கும். அதாவது, நாட்டின் குறுக்கே ஓடும் விதமாக மெரதன் ஓட்டப்போட்டிப் பாணியில் இப்போட்டி அமையப் பெற்றிருக்கும். ஆனால், ஐவகைப் போட்டிகளுள் அடங்குகின்ற ஏனைய போட்டிகளில் பெற்ற புள்ளிகளை செக்கன் கணக்கில் மாற்றீடு செய்து அதில் கிடைக்கின்ற பெறுபேறுகளின் வித்தியாசத்திற்கேற்ப இப்போட்டியின் போது ஓடும் வீரர்களுக்கான ஓட்ட ஆரம்ப ஸ்தானம் வழங்கப்படும். இதற்கமைய போட்டி ஆரம்பமாகி வெற்றி எல்லையை அடைந்து முதல் மூன்று இடங்களை பெறுகின்றவர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்படும்.

## நீச்சல்



இது 200 மீற்றர் தூரத்திற்கான நீச்சல் போட்டியாகும். போட்டியாளர்களின் முன்னாள் சாதனைகளுக்கு ஏற்ப போட்டியாளர்கள் தரப்படுத்தப்படுவர். நீச்சல் தடாகம் 50 மீற்றர் நீளத்தை கொண்டிருக்கும்.

## துப்பாக்கி சுடுதல்

போட்டியாளர் 10 மீற்றர் தொலைவிலுள்ள குறிப்பிடப்பட்ட இலக்கை நோக்கி துப்பாக்கியால் சுடவேண்டும். ஒவ்வொரு போட்டியாளரும் 4.5 மில்லிமீற்றர் அளவுகொண்ட கைத்துப்பாக்கியை பயன்படுத்த வேண்டும். அவ்வாறே அத்துப்பாக்கி 1.5 கிலோகிராமுக்குக் குறைந்த எடையைக் கொண்டிருக்க வேண்டியதும் கட்டாயமாகும். போட்டியாளர் வெவ்வேறு திசைகளில் அமைக்கப்பட்டிருக்கும் 20 இலக்குகளை நோக்கி 40 விநாடிகளுக்குள் (20 வேட்டுக்களை) சுட்டு முடிக்க வேண்டும்.

## குதிரை சவாரி

முதல் மூன்று போட்டியில் பெற்ற புள்ளிகளுக்கேற்ப போட்டியாளர்கள் தரப்படுத்தப்பட்டு பின்னர் அவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுவர். போட்டி அமைப்பாளர்களால் எட்டுக் குதிரைகள் வழங்கப்படும். இந்த எட்டுக் குதிரைகளில் ஒன்றைத் தெரிவு செய்து கொண்டு போட்டியாளர் போட்டிக்குத் தயாராக வேண்டும். 350 மீற்றர் தொடக்கம் 400 மீற்றர் வரையிலான தூரத்தை இந்த குதிரையைக் கொண்டு ஓடி முடிக்கவேண்டும். இதன்போது ஓட்டக்களத்தில் 12 தடைகள் போடப்பட்டிருக்கும்; இந்தத் தடைகள் வேலிகளாகவோ, தண்ணீர் குட்டைகளாகவோ காணப்படும். இந்தத் தடைகள் 1.2 மீற்றர் உயரத்தையும் 120 செ.மீற்றர் அகலத்தையும் கொண்டிருக்கும். இந்தத் தடைகளை தனித்தனியாக ஒவ்வொரு வீரரும் ஓடி முடித்த பின்னர், ஒவ்வொரு வீரரும் எடுத்த நேரக் கணிப்பீட்டின்படி வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார்.

## வாள்சண்டை



வாள் சண்டையின்போது ஒவ்வொரு போட்டியாளரும் ஏனைய அனைத்துப் போட்டியாளர்களுடனும் போட்டியிடல் வேண்டும். இப்போட்டிகள் உள்ளக அரங்கில் நடைபெறும். ஒவ்வொரு போட்டியும் ஒரு நிமிடத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். எந்தவொரு போட்டியாளராவது முதலாவது புள்ளியை எடுத்த கையோடு போட்டி முடிவிற்கு வந்துவிடும். இந்த ஒரு விநாடிக்குள் இரண்டு போட்டியாளர்களில் எவருமே புள்ளியைப் பெறவில்லையாயின் இரண்டு பேருமே தோல்வி அடைந்தவர்களாக கருதப்படுவர்.

## பண்டைய ஐவகைப் போட்டிகள்



பண்டைய ஒலிம்பிக் போட்டியில் ஜனரஞ்சகமான போட்டியாக இது கருதப்படுகின்றது. பண்டைய ஒலிம்பிக் போட்டிகளை அறிமுகப்படுத்தியவர்களான பெரன் பியரே அவர்களும் குபர்டீன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். 1912 ஆம் ஆண்டில் சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இப்போட்டிகள் இடம்பெற்றன. இந்த வகையான ஒரு போட்டி அறிமுகப் படுத்தப்பட்டதன் நோக்கம், எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது போர் வீரன் ஒருவன் அவசரத் தகவலொன்றைக் கொண்டு செல்ல வேண்டியிருப்பின் தனது பயணத்திற்கு எதிரே வரும் பலவிதமான தடைகளை வெற்றிகரமாக தாண்டிச் செல்லும் சாதுர்யத்தை, திறமையை கொண்டிருப்பதுடன் உரிய இடத்தை சென்றடைந்து அச்செய்தியை ஒப்படைப்பதற்கான பயிற்சியாகவும் அது அமையவேண்டும் என்பதற்காகவுமேயாகும்.

### போட்டிகள்



1. **துப்பாக்கி சுடுதல்**

   20 மீற்றர் தொலைவைக் கொண்ட 20 திசைகளில் உள்ள இலக்குகளை நோக்கி 20 விநாடிகளுக்குள் சுட்டுத் தீர்த்தல் வேண்டும்.

2. **வாள் சண்டை**

   கூரிய வாள்களைக் கொண்டு போட்டியாளர்கள் போட்டியிட வேண்டும். ஒரு விநாடிக்கே போட்டி மட்டுப் படுத்தப்பட்டிருக்கும். அதற்குள் முதல் புள்ளிகளைப் பெறுபவர் வெற்றியாளராக கருதப்படுவார்.

3. **நீச்சல் போட்டி**

   200 மீற்றர் தூரத்தை நீந்தி முடித்தல் வேண்டும். தடாகத்தின் முடிவு எல்லையைத் தொட்டுவிட்டு மீண்டும் ஆரம்ப எல்லையை வந்தடைய வேண்டும் ஒவ்வொருவரதும் நேரக்கணிப்பீட்டின்படி வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

4. **குதிரை சவாரி**

   350 மீற்றரையும் 450 மீற்றரையும் கொண்ட தூரத்திற்குள் போடப்பட்டிருக்கும் 12 விதமான தடைகளை குதிரையின் துணை கொண்டு தாண்டிச் செல்லவேண்டும்.

5. **ஓட்டப்போட்டி**

   முன்னைய நான்கு போட்டிகளிலும் போட்டியாளர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் போட்டியாளரின் ஆரம்ப எல்லை (Start) தீர்மானிக்கப்படுவதுடன் 3000 மீற்றர் தூரத்திற்கு ஓட வேண்டியிருக்கும். இப்போட்டியின் இறுதியை அடுத்து ஒட்டு மொத்தப் போட்டிகளிலும் வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார்.

REUTERS

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடிகார பாவனையின் ஆரம்பம்


நீர்க்கடிகாரம்

கடிகாரம் மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஓர் அம்சமாக விளங்குகின்றது என்றால் அதை மறுக்க முடியாது. கடிகாரம் இன்றி, நேரம் பற்றிய உணர்வு இன்றி யாராவது தற்காலத்தில் வாழ இயலுமா? தவறான நேரத்தைக் காட்டும் பழுதுபட்ட கடிகாரத்தை நம்பினால், குறித்த காலத்தில் எந்தவொரு வேலையையும் செய்ய முடியாது இருக்கும். எனவே, கடிகாரம் காட்டும் நேரத்தை நம்பியே மனித வாழ்க்கை முறையாகச் செல்கிறது என்பதில் மிகையில்லை.

நாகரிக முதிர்ச்சியின் ஒரு கட்டமாக நேரத்தை அளவிடும் முறை மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டது. பழங்காலத்தில் சூரியனின் உதிப்பை அதன் விளைவாக நிகழும் நிழல்களின் நகர்வையும் அடிப்படையாகக் கொண்டு நேரம் அளவிடப்பட்டது. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் சுமேரியர்கள் (பபிலோனியர்கள்) நேரத்தை அளவிட முயன்றதாகவும் இதில் முன்னோடிகளாக விளங்கியவர்கள் சுமேரியர்களே என்றும் கருதப்படுகின்றது. 'சுமேரிய' நாகரிகமே ஓர் ஆண்டை மாதங்களாகவும் மாதத்தை நாட்களாகவும் ஒரு நாளைப் பல கூறுகளாகவும் பிரித்தது என்றும் கூறப்படுகிறது.

காலப்போக்கில் அரேபியர்கள் தமது சொந்த முறைகளைக் கையாண்டு நேரத்தை அளப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இவற்றுடன், சூரியன் நகர்வதைப் பின்பற்றி 24 பெரிய கம்பங்களை வட்டப்பாதையில் நிறுவி, ஒளியும் நிழலும் அவற்றின் மீது விழுவதன் அடிப்படையில் எகிப்தியர்கள் நேரத்தை அளவிட்டனர். தொடர்ந்து நேரத்தை அளவிடும் முயற்சி பல்வேறு நகரங்கள் வாயிலாகப் பல நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளையில் கிரேக்க நாட்டில் தண்ணீரைப் பயன்படுத்தி, நேரத்தை அளவிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு தண்ணீர் ஒவ்வொரு துளியாக ஒரு கல் பாத்திரத்தில் விழுமாறு அமைக்கப்பட்டது. திரட்டப்பட்ட தண்ணீரின் அளவை அடிப்படையாகக் கொண்டு நேரம் அளவிடப்பட்டது. இத்தகைய முறை கி.மு 320 இல் வழக்கத்தில் இருந்து வந்தது. கிரேக்கர்களும் ரோமானியர்களும் கி.மு 300-400 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இந்த தண்ணீர்க் கடிகாரத்தில் மாற்றங்களைப் புகுத்தி அதனை மேம்படுத்தினர். இதனையடுத்து வந்த காலங்களில் பலரும் பல உத்திகளைக் கையாண்டு கடிகார உருவாக்கத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டனர்.


பீட்டர் ஹென்லெய்ன் உருவாக்கிய கடிகாரம்

தொடர்ந்து 1510 ஆம் ஆண்டுப் பகுதியில் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த கடிகாரம் செய்யும் தொழிலாளியான பீட்டர் ஹென்லெய்ன் என்பவர், நேரத்தைக் காட்டும் மடிக்கக்கூடிய கடிகாரம் ஒன்றை உருவாக்கினார். பின்னர், 1656 ஆம் ஆண்டளவில் ஒல்லாந்த நாட்டுத்தொழில்நுட்ப வல்லுனர் ஹியூஜன்ஸ் என்பவர் ஊசல் (Pendulum) அசைவில் இயங்கும் கடிகாரம் ஒன்றை உருவாக்கி, நேரத்தை அளவிடும் முயற்சியில் வெற்றி பெற்றார். இவர் ஒரு நாளை 24 மணித்தியாலங்களாக ஒரு மணியை 60 நிமிடங்களாகவும் ஒரு நிமிடத்தை 60 நொடிகளாகவும் வகுத்தார். புதிய முறைகளைப் பயன்படுத்தி கடிகாரத்தை மேம்படுத்தினார். இப்போதுள்ள கடிகாரங்களெல்லாம் இதன் மேம்படுத்தப்பட்ட வடிவங்களேயாகும். ஆரம்பத்தில் மேற்படி கடிகாரத்தின் பகுதிகளெல்லாம் பலகையினால் செய்யப்பட்டவையாகவே இருந்தன. பின்னாளில் இப்பகுதிகள் உலோகம் மற் றும் கண்ணாடிகளினால் செய்யப்பட்டன.


சூரிய சுழற்சி கடிகாரம்


தற்போது பாவனையிலுள்ள கடிகாரம்


ஊசல் கடிகாரம்

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை, ஊசல் கடிகாரங்களே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தன. சமச்சீராக அசையும் ஊசல், கடிகாரத்தின் இரு முட்களை இயக்கிச் சரியான நேரத்தைக் காட்டுவதற்குப் பயன்பட்டது. இவ்வகைக் கடிகாரங்களை இன்றும் காணலாம். ஆனால், மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், ஊசல் கடிகாரங்கள் மாற்றமடைந்தன. அலெக்சாண்டர் பெயின் என்பவர் 1840 ஆம் ஆண்டில் மின்கலத்தில் இயங்கும் கடிகாரத்தைக் கண்டுபிடித்தார். பின்னர் பல அறிவியல் கண்டுபிடிப்பாளர்கள் இவ்வகைக் கடிகாரத்தை மேம்படுத்தி, பெரிய மின்கலங்களுக்குப் பதிலாகச் சின்னஞ்சிறு மின்கலங்களைப் பயன்படுத்தி கடிகாரங்களை வடிவமைத்தனர்.

இதனடிப்படையில் கடிகார உருவாக்கம் ஆரம்பமாகி, இன்று தொழில்நுட்ப நுணுக்கங்களுடன் கூடிய இலத்திரனியல் கடிகாரங்கள் வரை சந்தையில் உலா வரத் தொடங்கியுள்ளன.

**ஜெ.டிசோகுமார்**

# காடுகளைப் பாதுகாப்போம்

அடர்ந்த காடுகளில் பல அபூர்வமான இயற்கைப் படைப்புகளைக் காணலாம். காடுகளில் எண்ணற்ற உயிரினங்கள், பல்வேறு வகையான தாவர இனங்கள் காணப்படுகின்றன. இவை இப்புவியின் சூழலியல் சமன்பாட்டிற்கு ஏற்ப அழிந்தும் பெருகியும் நிலைத்தும் இருக்கின்றன. இதில் ஏற்படும் பாரிய மாற்றங்கள் ஏதாவதொரு வகையில் மனிதனையும் பாதிக்கின்றன. இதனால்தான் உலக நாடுகள் பல காடுகளின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன.

## இயற்கைச் சூழலின் சமநிலை பாதிப்பு

கானகத்தில் வாழும் தாவர உண்ணிகளுக்குத் தேவையான பசுந்தழைகள், பூ, மொட்டு, காய், கனி, கிழங்கு, வேர் போன்றவற்றைத் தரக்கூடிய போதிய தாவர இனங்களும் ஊன் உண்ணிகளுக்கு இரையாகக்கூடிய விலங்குகளும் மலிந்து கிடக்கின்றன. மொத்தத்தில் இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் ஒன்றிலொன்று தங்கியே வாழ்கின்றது.

வறட்சி, காட்டுத்தீ மேலும் பல இயற்கை அனர்த்தங்களினால் காடுகளில் உள்ள தாவர இனங்கள் பெருமளவில் மடிந்து போகும் அபாயநிலை தோன்றியுள்ளது. அதேவேளை, தாவரம் உண்ணும் விலங்குகளினால் எஞ்சி இருக்கின்ற தாவரங்களின் எண்ணிக்கையும் குறைகின்றன. இவ்வாறு காடுகள் அழிவடையும்போது விலங்குகள் தமது இருப்பிடத்தை இழக்கின்றன. அத்துடன், இவற்றுக்கான உணவுக்கும் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. தாவரங்களின் அழிவினால் உணவின்றித் தாவர உண்ணிகள் அழிய, அதில் வாழும் ஊன் உண்ணிகளும் அழிகின்றன. இதன்போது, எஞ்சிய விலங்குகள் மனித நடமாட்டம் உள்ள பிரதேசங்களை நாடி வருகின்றன. தாவர உண்ணிகள் மனிதனின் விவசாய நிலங்களையும் ஊன் உண்ணிகள் மனிதனின் வீட்டு விலங்குகளையும் அழிக்க முனைகின்றன.

இத்தகைய இயற்கைக்குப் புறம்பான சந்தர்ப்பங்களினால் விலங்குகள் மனிதனின் சொத்துக்களை மட்டுமல்ல, மனிதனைக் கூட கொன்று புசிக்க முற்படுகின்றன. இவ்விடயத்தில் சற்றும் பின்வாங்காத மனிதன் இந்த விலங்குகளைப் பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்திக் கொன்று தீர்க்கின்றான். மேற்படி அசாதாரண நிகழ்வுகளினால் இயற்கைச் சூழலின் சமநிலை பாதிக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**-இரஞ்சித் ஜெயகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 185 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-196) |
|---|---|---|---|---|
| பா.மதுஷா, தரம் - $6^{V}$, சிவசக்தி ம.வித்., களுவாஞ்சிக்குடி. | நி.அக்மா, தரம் - $2^{A}$, கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை. | செய்யத் அல்தாப், தரம் - 6, அல்/ஹுதா மு.வித்., குருணாகலை. | அஹமட் ஸாபி, தரம் - $8D^{2}$, டி.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-9 | மோ.சுரம்யா, தரம் - 8, பாக்கியம் தே.கல்., மாத்தளை. |

### சரியான வசனத்தில் கோடிடுக (4)

1) a. நானும் நீயும் கடைக்குப் போனோம்.
   b. நானும் நீயும் கடைக்குப் போனோம்கள்.
   c. நானும் நீங்களும் கடைக்குப் போனீர்கள்.

2. a. அவன் காட்டு மரங்களை வெட்டி வீழ்த்தின.
   b. அவனால் காட்டு மரங்களை வெட்டி வீழ்த்தினான்.
   c. அவன் காட்டு மரங்களை வெட்டி வீழ்த்தினான்.

3. a. கமலா இனிமையாகப் பாட்டுப் பாடுவாய்.
   b. கமலா இனிமையாகப் பாட்டுப் பாடினாய்.
   c. கமலா இனிமையாகப் பாட்டுப் பாடினாள்.

4. a. நேற்று மாலை இடியுடன் கூடிய மழை பொழிந்தது.
   b. நேற்று மாலை இடியுடன் கூடிய மழைகள் பொழிந்தன.
   c. நேற்று மாலை இடியுடன் கூடிய மழையும் பொழிந்தது.

5. a. சித்திரத்தை வரைவது சிறந்த பொழுதுபோக்கு அம்சமாகும்.
   b. சித்திரம் வரைவது சிறந்த பொழுதுபோக்கு அம்சமாகும்.
   c. சித்திரங்களை வரைவது சிறந்த பொழுதுபோக்கு அம்சங்களாகும்.

### ஒழுங்கான உருவை அமைக்க (2)



### கணக்குப் புதிர் (3)

மோகனின் அப்பா அவனது தங்கையின் பிறந்த நாள் அலங்காரங்களுக்காக சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை ஆகிய நிறங்களில் மொத்தம் 36 பலூன்களை வாங்கி வந்தார். அவற்றில் 4 பலூன்களில் சிறிய துளைகள் இருந்தன. எஞ்சியிருந்த மஞ்சள், நீலம், சிவப்பு பலூன்கள் ஊதிக் கட்டப்பட்டன. கட்டப்பட்ட பலூன்களில் 5 பலூன்கள் உடனே வெடித்து விட்டன.

1. அப்பா வாங்கி வந்த பலூன்களில் வெடிக்காமல் உள்ள பலூன்கள் எத்தனை? ................................
2. பயன்படாமல் போன பலூன்கள் எத்தனை? ..........................
3. எத்தனை நிறங்களில் பலூன்களை அப்பா வாங்கி வந்தார்? ..................................
4. துளைகள் அற்ற ஊதிக்கட்டப்பட்ட பலூன்கள் எத்தனை? ..................................
5. துளைகள் இருந்த பலூன்கள் எந்த நிறமுடையது? . ....................................

### போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## அறிவுக்கு விருந்து-185 விடைகள்

**போட்டி: 01**

முதலாவது வரிசையிலுள்ள 1,3 ஆவது படங்களும் இரண்டாவது வரிசையிலுள்ள 2 ஆவது படமும் ஒரே மாதிரியானவை.

**போட்டி: 03**

a) வியட்நாம்
b) சிங்கப்பூர்
c) இஸ்ரேல்
d) நேபாளம்

**போட்டி: 04**

1. சரி
2. பிழை
3. சரி
4. சரி
5. பிழை


### ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக (1)







### குறுக்கெழுத்துப் போட்டி இல. 199 (5)



**மேலிருந்து கீழ்**

01. (பொதுவாக) பண்டைய வரலாற்று நிகழ்வுகள் குறித்து பொறிக்கப்பட்டுள்ள சாதனம்.
02. இந்தியாவின் தேசிய விளையாட்டு.
03. கொடிய மீனினம் ஒன்று.
04. நாய்க்குடும்பத்தைச் சேர்ந்த காட்டு விலங்கு.
07. பணமாக மட்டுமன்றி இதன் மூலமும் வங்கியில் வைப்புச் செய்யலாம்.
09. இலக்கம்-ஒத்தகருத்துச் சொல்.
11. மரங்கள் அடர்ந்த, விலங்கினங்களுக்குப் புகலிடமாக விளங்கும் இயற்கையின் கொடை.

**இடமிருந்து வலம்**

01. விரைவாகச் செல்லும் போக்குவரத்துச் சேவையை இவ்வாறு குறிப்பிடுவர்.
05. சிலருக்கு முகத்தில் தோன்றுவது.
06. மரக்கறி வகையொன்று.
08. செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் குறைபாட்டினால் ஏற்படும் நோய். இந்நோயை 'அனீமியா' என்றும் கூறுவர். (மாறி)
10. விண்வெளிக்குச் சென்ற முதலாவது நாயின் பெயர்.
12. உணவு-ஒத்தகருத்துச் சொல்.

### குறுக்கெழுத்துப்போட்டி 196 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. முத்தமிழ் | 01. முகடு |
| 02. டுபாய் | 03. ஆழி |
| 03. ஆன்மா | 04. பாகன் |
| 05. கலாநிதி | 06. தலய்லாமா |
| 07. தோல்வி | 08. பொதி |
| 08. பொறி | 09. மறி |
| | 10. புவி |

குறுக்கெழுத்துப் போட்டி -199
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

எம்.நஸ்லிம், தரம் - $9^{B}$,
ஜீலான் ம.தே.கல்., பாணந்துறை.

பாத்திமா ஷபியா, தரம் - $11^{E}$,
மட்/ஏறாவூர் அலிகார் தே.பாட., ஏறாவூர்.

ச.பிரவீன், தரம் - $9^{C}$,
மட்/புனித மிக்கேல் கல்., (தே.பாட.,) மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# நத்தார் கெரோல் கீதங்கள்



நத்தார் தினம் எனும்போது 'கெரோல் கீதங்கள்' இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது.

## முதலாவது கெரோல் கீதம்

வண.பிதா பிரான்சிஸ் அவர்களால் இயேசு பாலன் குடில் அமைத்து அதன் முன் முழங்கால் படிந்து பயபக்தியுடன் பாடிய பாடலே முதலாவது 'கெரோல் கீதம்' எனக் கருதப்படுகின்றது.

''உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும் பூமியிலே நல் மனதுள்ளோருக்கு அமைதியும் உண்டாவதாக'' என்ற பரிசுத்த வேதாகமத்தின் வசனத்தை அக்கெரோல் கீதம் உள்ளடக்கி இருந்ததாக கூறப்படுகிறது. 'கெரோல்' என்ற சொல் பிரெஞ்சு மொழியில் கெரோஸ் அவுலயின் என்ற வசனத்தில் இருந்து வந்ததாக கருதப்படுகின்றது.

அதில் 'கெரோல்' என்றால் 'ஆடல்' என்றும் அவுலயின் என்றால் 'குழல் ஊதுதல்' என்றும் அர்த்தமாகும். 'கென்டா' எனும் பெயரில் இலத்தீன் மொழியில் பாடப்பட்ட கெரோல் கீதம் முன்னைய காலத்தில் உலகெங்கும் பரவியதோடு ஐரோப்பாவின் பல்வேறு மொழிகளிலும் பின்னர் பாடப்பட்டு மக்களின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்தது. இன்று 'கெரோல்' என அழைக்கப்படும் இந்தச் சொல்லை கிரேக்கர்களே முதன்முதலாகப் பயன்படுத்தினர்.

## இலங்கையில் கெரோல் கீதம்

தென் இலங்கையில் சேவை புரிந்த பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த ஐரோப்பிய குருவானவரான அந்தோனியோ என்பவரால் இலங்கையில் முதன்முதலாக கெரோல் கீதம் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும், அக்கீதம் தற்போது கைவசம் இல்லை என்பது வேதனைக்குரியதே. அதன் பின் 1705 இல் ஜாக்கோமே கொன்சால்வேஸ் எனும் குருவானவரால் கெரோல் கீதம் இயற்றப்பட்டு இசைக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் நத்தார் தினமாகிய டிசம்பர் 25 ஆம் திகதிக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பிருந்தும் 24 ஆம் திகதி இரவும் 25ஆம் திகதிக்கு பின்வரும் சில நாட்கள் வரையும் கெரோல் கீதங்கள் பாடப்படும். கெரோல் வண்டி 'கெரோல்' கீதங்களைப் பாடியபடி ஊர்களில் வலம் வரும்.





## புகழ்பூத்த கெரோல் கீதங்கள்

உலகில் மிகப் பிரபலமான கெரோல் கீதம் சைலன் நைட் (Silent Night) என்ற பாடலாகும். 1816 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இப்பாடல் ஏறக்குறைய 200 ஆண்டுகளாக உலகின் நாலாதிசைகளிலும் பாடப்பட்டு வருகின்றது. அவுஸ்திரேலியாவின் ஜோசப்மோர் எனும் குருவானவரால் உருவாக்கப்பட்ட இப்பாடல் உலகெங்கும் பல்வேறு மொழிகளில் பாடப்படுகின்றது. அமெரிக்க சிவில் யுத்த நேரத்தில் உருவான 'ஜிங்கல் பெல்ஸ்' (Jingle Bells) எனும் கெரோல் கீதம் உலகப் புகழ் பெற்றது. அதன்பின் உருவான 'On little town of Bethlehem' எனும் கெரோல் கீதமும் உலகப் புகழ் பெற்றது.

## வானொலியில் கெரோல் கீதம்

1938 இல் முதன்முதலாக வானொலியில் கெரோல் கீதம் இசைக்கப்பட்டது. 'கெரோல்ஸ் பை கென்டில் லைட்' எனும் நிகழ்ச்சி மூலம் அவுஸ்திரேலிய வானொலி இதனை ஒலிபரப்பியது.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, டிசம்பர் மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 24, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org